வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

Eelanadu
# ஈழநாடு
வார மலர்

Email : news@eelanadu.lk மலர் : 06 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 69 பக்கங்கள் : 16




# மன்னார் மின் திட்டத்தில் இருந்து அதானி குழுமம் விலகுவது உறுதி!

## இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 09

**மன்னார் காற்றாலை மின்சார உற்பத்தித் திட்டத்தில் இருந்து விலக இந்தியாவின் அதானி குழுமம் உறுதியாக முடிவு செய்துள்ளதாக இந்திய உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளூர் அதிகாரிகள் அதானி நிறுவனத்திடம், இந்தத் திட்டத்தில் இருந்து விலகுவார்களா இல்லையா என்பதை கடந்த வியாழக்கிழமைக்குள் (மார்ச் 6) தெரிவிக்குமாறு தெரிவித்துள்ளனர். ஆனால், அந்த நிறுவனம் எந்த பதிலையும் அளிக்கவில்லை.

அதன்படி, மன்னார் காற்றாலை மின்சாரத் திட்டத்தில் இருந்து அந்த நிறுவனம் விலகியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அதானி நிறுவனம் இந்தியாவின் கான்பூரில் உலகத் தரம் வாய்ந்த இயந்திரத் துப்பாக்கி உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கௌதம் அதானியின் திறப்பு விழாவின் ஒளிப்படங்கள் அதானியின் எக்ஸ் கணக்கில் வெளியிடப்பட்டுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



படம் : ஐ.சிவசாந்தன்

# வடக்கின் பெரும் சமரில் சென்.ஜோன்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், மார்ச் 09

வடக்கின் பெரும் சமர் என அழைக்கப்படும் பரியோவான் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் பரியோவான் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தமது முதலாவது இன்னிங்ஸில் 131

15

# பிள்ளைகள் தண்டிக்கப்படுவதை தடுக்கும் சட்டம் விரைவில் தேவை!

## நீதி அமைச்சர் சபையில் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 09

பிள்ளைகளைத் தண்டிப்பதற்குத் தடை விதிக்கும் சட்டம் ஒன்று மிகவும் விரைவில் நிறைவேற்றப்படவேண்டும் என நீதிமன்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செலவின தலைப்பு மீதான குழுநிலை விவாதத்தின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

பெண்களைக் கண்ணியத்துடன் நடத்துவதற்கு வீட்டிலிருந்தே பெற்றோர் பழக்கி னால் எதிர்காலத்தில் நல்லதொரு

15

# யாழில் மாணவியை வீடியோ எடுத்த யூடியூபர் விவரம் கோரிய மனித உரிமை ஆணைக்குழு!

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல யூடியூபர் ஒருவர், ஏழ்மையான குடும்பம் ஒன்றுக்கு உதவுவதாக கூறி அவர்களின் வீட்டுக்குள் நுழைந்து அங்கு மாணவி ஒருவரை கட்டாயப்படுத்தி வீடியோ எடுக்க முயன்ற சம்பவம் தொடர்பான வீடியோ சமூக வலைத் தளங்களில் வைரலாகியதைத் தொடர்ந்து சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் பெயர், விவரங்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்வதாகக் கூறி குறித்த யூடியூபர் பல காணொளிகளை வெளியிட்டு வருகிறார். அதிகமாக புலம்

15

# தமிழரசு கட்சியின் மத்திய குழு இன்று வவுனியாவில் கூடுகிறது

வவுனியா, மார்ச் 09

இலங்கை தமிழரசு கட்சியின் மத்தியக் குழு கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வவுனியாவில் இன்று முற்பகல் இந்த கூட்டம் நடைபெறவுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பா.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இதன்போது விசேட அவதானம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடுவது தொடர்பில், கடந்த மத்திய குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றம் தொடர்பில் இன்று அவதானம் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# ஓகஸ்டில் பதவி துறப்பேன்!

## சபையில் கூறினார் அர்ச்சுனா எம்.பி.

கொழும்பு, மார்ச் 09

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்து அந்த பதவியை பெண் பிரதிநிதி ஒருவருக்கு வழங்குவேன் என்று யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15

# நாணய நிதியத் திட்டத்துடன் முன்னோக்கிச் செல்ல தயார்!

## உறுதியளித்தார் ஜனாதிபதி அநுர

கொழும்பு, மார்ச் 09

இலங்கை மக்களின் வலுவான ஆணையைப் பிரதிபலிக்கும் வகையில், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லவற்கும், இணக்கம் காணப்பட்ட இலக்குகளை மக்களின் விருப்பத்துக்கு அமைய அடைந்துகொள்வதற்கும் தயாராக உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உறுதியளித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவாவுடனான நிகழ்நிலைச்

15

# மத்திய வங்கி பத்திர மோசடி; ரணில் மீது புதிய விசாரணை!

கொழும்பு, மார்ச் 09

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதான குற்றச்சாட்டுகள் குறித்து அரசாங்கம் புதிய விசாரணையைத் தொடங்கும் என பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அல் ஜசீராவுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிடப்பட்ட, பட்டலந்த அறிக்கை தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க அரசாங்கம்

15

# யாழில் கல்சியம் நீக்கி திரவத்தை அருந்திய குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ்ப்பாணத்தில் கல்சியம் நீக்கி திரவத்தை அருந்திய நபர் ஒருவர் நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த பேரம்பலம் யோகேஷ்வரன் (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் அவரது வீட்டில் இருந்த கல்சியம் நீக்கி திரவத்தை அருந்தினார். இதனையடுத்து அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

15

# கைது வேட்டை மூலம் எமது பயணத்தை தடுக்க முடியாது!

## நாமல் ராஜபக்ஷ சூளுரை

கொழும்பு, மார்ச் 09

கைது வேட்டை மூலம் எமது அரசியல் பயணத்தை தடுக்க முடியாது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ சூளுரைத்தார்.

பெண் உரிமைகள் பற்றி பேசும் தற்போதைய அரசாங்கம்தான், 97 வயது பாட்டியை கைது செய்து, உணவுகூட வழங்காமல் விசாரணை நடத்தியுள்ளது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு உரிய அங்கீகாரத்தை அரசியல் கட்சிகள் வழங்க வேண்டும்

## கபே நிறைவேற்று பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 09

வேட்புமனு விண்ணப்ப படிவங்களின் வெற்றிடத்தை பூர்த்திசெய்வதாக மட்டும் கருதாது பெண்களின் திறமைக்கும் அவர்களது சேவைக்கும் உரிய அங்கீகாரத்தை வழங்குவதை இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலில் உறுதி செய்ய வேண்டும் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முஹம்மட் மனாஷ் மகீன் தெரிவித்தார்.

பெண்களின் டிஜிற்றல் பாதுகாப்பு மற்றும் ஊடகப் பாதுகாப்பை அரசியல் கட்சிகளும் துறைசார் அமைச்சும் உறுதிப் படுத்துவது அவசியம் எனவும் அவர் கூறினார்.

பெண்களுக்கான டிஜிற்றல் மற்றும் ஊடகப் பாதுகாப்பை மையப்படுத்திய 3 நாட்கள் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்றையதினம் ஆரம்பமானது.

இதனை ஆரம்பித்து வைத்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“கபே அமைப்பால் பல்வேறு பயிற்சிப்பட்டறைகள் மற்றும் திட்டங்களை பெண்களுக்காக மேற்கொண்டுள்ளபோதும் இணைய உலகில் பெண்களிடையே இருக்கும் ஆற்றல்களை செழுமைப் படுத்தி இன்றைய உலகின் வேகத்துக்கேற்ப புதிய உத்வேகத்துடன் அவர்களை வெளிக்கொணரும் களத்தை உருவாக்கும் முயற்சியாவே இந்த நிகழ்வு முன்னெடுக்கப் படுகின்றது.

குறிப்பாக நாடளாவிய ரீதியில் அரசியல் பிரவேசத்தை முன்னெடுக்கவுள்ள அல்லது அரசியல் நீரோட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற பெண்கள், நவீன உலகின் தேவைக்கேற்ப ஆற்றலுள்ளவர்களாக பரிணமிக்க வேண்டியது அவசியம்.

அதற்காக அவர்கள் தங்களை இன்றைய நவீன தொழில் நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் பக்கமும் ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாகும்.

பெண்களின் டிஜிற்றல் பாதுகாப்பு மற்றும் ஊடகப் பாதுகாப்பை அரசியல் கட்சிகளும் துறைசார் அமைச்சும் உறுதிப் படுத்துவது அவசியம். அத்துடன் கூகுள் உள்ளிட்ட சமூக ஊடக நிறுவனங்களும் இதை உறுதி செய்வதற்கு தமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இதேநேரம், நடைபெறவுள்ள உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலில் வேட்பு மனுக்களின் போது வேட்புமனுவில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மட்டும் பெண்களை வேட்பாளர்களாக உள்ளீர்க்க வேண்டாம் என நாம் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுகின்றோம்”- என்றார். (எ-05)



# இளைஞர்கள் தொழில் சந்தையை பயன்படுத்தி கொள்ள வேண்டும்

## யாழ். மேலதிக அரச அதிபர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச்.09

யாழ். மாவட்டத்தில் தமது கல்வித் தகுதிக்கேற்ப தொழில் தேடிக்கொண்டிருக்கும் இளைஞர் - யுவதிகள் தொழில் சந்தையை தமக்கானதாக பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் க. சிறீமோகனன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகமும் மனிதவள மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த தொழில் சந்தை நேற்று யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய மேலதிக அரச அதிபர் மேலும் கூறுகையில்,

“தொழில் வழங்குநர்கள் மற்றும் தொழில் தேடுவோரை ஒன்றிணைத்து இளைஞர் - யுவதிகளின் தொழில் தேடுதலுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

இதை எமது பகுதி தொழில் தேடுநர்கள் தமது எதிர்காலம் கருதியதாக பயன்படுத்தி வெற்றி காண வேண்டும்- என்றார். (எ- 05)

# “கோணேஸ்வரம் திருப்பணிகளை இந்திய அரசு செய்துதர வேண்டும்”

திருகோணமலை, மார்ச்.09

திருக்கோணேஸ்வரத்தின் திருப்பணிகளை இந்திய அரசு செய்து தர வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“தென்கயிலை எனப் போற்றப்படுவதும் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றானதும் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றதுமான திருக்கோணேஸ்வரத்தின் திருப்பணிகள் நீண்ட காலமாக முடிவுறாமல் நிலுவையில் உள்ளன.

இந்திய அரசானது, மற்றுமொரு பாடல் பெற்ற தலமான திருக்கேதீச்சரம் கோவில் திருப்பணிகளை செய்து முடித்தது போல திருக்கோணேஸ்வரத்தின் திருப்பணிகளையும் செய்துதர வேண்டும் என வேண்டுகிறேன்.

அந்த வகையில் இராஜ கோபுரம் அமைத்தல், மணி மண்டபம் அமைத்தல், சக்தி பீடம் அமைத்தல், வெளி வீதி அமைத்தல், பஞ்சலிங்கங்களை திருநிலைப்படுத்தல், முதலிய திருப்பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆக்கமும் ஊக்கம் அளிக்க வேண்டும் என இந்திய அரசை வேண்டிக் கொள்கின்றேன்”- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# இ.எம்.எஸ். விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் நேற்று ஆரம்பம்

## வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி




வவுனியா, மார்ச்.09

இலங்கை தபால் திணைக்களத்தின் நாடு தழுவிய இ.எம்.எஸ். விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் வவுனியா மாவட்டத்துக்கான நிகழ்வு வவுனியா தபால் நிலையத்தில் நேற்றுக்காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தச் சேவைமூலம் பொருட்கள், ஆவணங்கள், தபால் போன்றவற்றை அரச பாதுகாப்புடனும் விரைவாகவும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயல்பாடுகள் குறித்தும் மக்களுக்குத் தெளிவு படுத்தும் முகமாக வவுனியா தபால் ஊழியர்களால் வவுனியா நகரப் பகுதியில் விழிப்புணர்வு பேரணி ஒன்றும் நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டதோடு துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் உட்பட தபால் ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர். (எ)

# முன்னாள் அமைச்சர் ரணவீர தப்பியோட்டம்

கொழும்பு, மார்ச். 09

2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவை கைது செய்வதற்காக களனி பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற போது அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சிலர் முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவை கைது செய்வதற்காக நேற்று அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர்.


இதன்போது, குறித்த வீட்டினுள் பிரசன்ன ரணவீரவின் மனைவியும் ஏனைய குடும்பத்தினரும் மாத்திரமே இருந்துள்ளனர்.

பின்னர் பிரசன்ன ரணவீரவின் மனைவி மற்றும் சாரதியிடமிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தப்பிச் சென்ற முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர தனது கையடக்கத் தொலைபேசி இணைப்பை துண்டித்துக் கொண்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணியை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட மூவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர உட்பட 6 பேரைக் கைது செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (எ)





யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு - வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானி நிறுவன மின் திட்டம் இரத்துச் செய்யப்படவில்லை!

கொழும்பு, மார்ச்.09

**இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் இன்னும் இரத்துச் செய்யப்படவில்லை என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார்.**

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சரின் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 6 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

“அதானி நிறுவனத்தின் மின் திட்ட கட்டணங்கள் அதிகமாக இருந்ததால், அதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில், இந்தத் திட்டத்திலிருந்து விலகுவதாக இலங்கை முதலீட்டு சபைக்கு இந்திய அதானி தாய் நிறுவனத்திலிருந்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய முதலீட்டு சபை இது குறித்து அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

எனினும், காற்றாலை மின் திட்டம் தொடர்பில் இலங்கையில் உள்ள அதானி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயத்தைப் பரிசீலிக்குமாறு அந்த நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கடிதத்தை அனுப்பி இரண்டு வாரங்களுக்குள் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனால், இந்த இரண்டு வாரங்களில் எதிர்மறையான பதில் கிடைக்கப்பெற்றால் மாத்திரம் ஏனைய மாற்றீடொன்றுக்கு செல்லவேண்டி வரும்.

எதிர்காலத்தில் இவ்வாறான திட்டங்களை அரசாங்கங்களுக்கிடையில் ஒப்பந்தங்கள் மற்றும் போட்டியான கொள்முதல் என்பன மூலம் மாத்திரம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது”- என்றார். (எ)

# கடனட்டை பயன்பாடு நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச்.09


நாட்டில் கடந்த ஆண்டு (2024) டிசெம்பர் மாதம் புதிய கடன் அட்டைகளும் கடன் அட்டை பயன்பாடுகளும் அதிகரித்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 19 இலட்சத்து 51,654 ஆக இருந்த கடன் அட்டைகளின் எண்ணிக்கை டிசெம்பர் மாதம் 19 இலட்சத்து 70,130 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய வங்கியின் தரவுகளின்படி, 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கடன் அட்டைகளின் எண்ணிக்கை 19 இலட்சத்து 17,085 ஆக காணப்பட்டது. அதனுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டு கடன் அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அந்தவகையில், 2024 ஆம் ஆண்டும் நவம்பர் மாதம் கடன் அட்டை பயன்பாடுகளால் கிடைக்கப்பெற்ற நிலுவைத் தொகை 151,614 மில்லியன் ரூபாயாக காணப்பட்ட நிலையில், டிசெம்பர் மாதமளவில் 157,957 மில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது. (எ)

# 2 லொறிகள் மோதி விபத்து இருவர் மருத்துவமனையில்



மொனராகலை, மார்ச்.09

மொனராகலை மாவட்டம் வெல்லவாய - தணமல்வில பிரதான வீதியில் ஊவா குடா ஓயா பகுதியில் இரண்டு லொறிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஊவா குடா ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது இரண்டு லொறிகளிலும் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் தணமல்வில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# திருமலை - கொழும்பு ரயில் சேவை மாற்றம்

## பயணிகள் அசௌகரியம்

திருகோணமலை, மார்ச்.09

திருகோணமலை ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணிக்கும் ரயில் சேவையின் புதிய நேர மாற்றம் காரணமாக பயணிகள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதுவரை காலமும் திருகோணமலையிலிருந்து இரவு 07.00 மணிக்கு புறப்பட்ட இரவு தபால் ரயில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 06.30 மணிக்கு திருகோணமலை ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தது.

ரயிலின் புதிய நேர மாற்றம் தொடர்பில் பல பயணிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை. குறிப்பாக ஏற்கனவே முன்பதிவு செய்திருந்தவர்கள் மாலை 06.30 மணிக்கு பின்னரே ரயில் நிலையத்துக்கு வருகை தந்திருந்திருந்தனர். இதனால், பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். (எ)

# கைகாட்டி சந்தியில் காட்டு யானைகள்!

## மக்கள் கடும் அச்சம்

சம்மாந்துறை, மார்ச்.09

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எல்லைக்கு உட்பட்ட கைகாட்டி சந்தி பகுதிக்குள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு காட்டு யானைகள் நுழைந்துள்ளன.

இதனால், பிரதேசவாசிகள் கடும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்தப் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்குமாறு உரிய அதிகாரிகளிடம் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# கொக்கிளாய் ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும்

கொழும்பு, மார்ச்.09

கொக்கிளாய் ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் மாகாண மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் வரும் முதன்மையான வீதிகள், உள்ளக வீதிகள் மிகவும் மோசமான நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. எனவே, இவற்றை மறுசீரமைக்க வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் பாலங்களும் பழுதடைந்துள்ளன. இவை நீண்ட காலத்துக்கு முன்னர் கட்டப்பட்டவையாகும். எடுத்துக்காட்டாக மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் கட்டைப்பறிச்சான் பாலம் (கறுப்பு பாலம்) மற்றும் இறால் பாலம் என்பன முழுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. இவற்றைச் சீரமைக்காவிட்டால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றைப் புதிதாக அமைக்க வேண்டும்.

அதேபோன்று, வெருகல் பிரதேசத்தில், ஏரிக்கும் கடலுக்கும் இடையில் சுமார் 5000 மக்கள் வாழ்கின்றனர். பேரிடர் காலங்களில், மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் சிக்கி மரணத்தை சந்திக்கக் கூடிய வாய்ப்பு உண்டு . இவ்வாறான விளைவுகளைத் தடுக்க ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும். திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடையில் கொக்கிளாய் ஏரி உள்ளது. இது ஓர் ஆழமற்ற ஏரி. புல்மோட்டையில் வாழும் மக்கள் கொக்கிளாய் ஏரி வழியாக 32 கிலோமீற்றர் பயணித்தால் முல்லைத்தீவை சென்றடையலாம். பாலம் இல்லாததால் மக்கள் வவுனியா வரை சுற்றிச் சென்று 75 கிலோ மீற்றர் அதிகமாகப் பயணித்து முல்லைத்தீவுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இது பணச் செலவையும் நேரச் செலவையும் ஏற்படுத்துகிறது. எனவே, கொக்கிளாய் ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும்”- என்றார். (எ)

# வடக்கு, கிழக்கில் சிதைவடைந்துள்ள வீதிகள், பாலங்களை புனரமையுங்கள்

## அரசிடம் ரிஷாட் எம். பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச்.09

வடக்கு, கிழக்கில் சிதைவடைந்துள்ள வீதிகள், பாலங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“ஒலுவில் துறைமுகம் தொடர்பில் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எந்தவொரு விடயங்களும் முன்வைக்கப்படவில்லை. இது சம்பந்தமாக நான் ஏற்கனவே பேசியிருகின்றேன். ஒலுவில் துறைமுகத்தால் அந்த பிரதேசத்தில் உள்ள மக்களுக்கும் மீனவர்களுக்கும் எந்தவொரு பயனும் இல்லை. எனவே, இது சம்பந்தமாக உங்களுடைய நிலைப்பாடு என்ன? என்பதை சபையில் தெளிவுபடுத்துமாறு வேண்டுகின்றேன்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கிட்டங்கி பாலம், மாவடிப்பள்ளி பாலம் என்பன மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளன. இந்த இரண்டு பாலங்களும் மிகவும் முக்கியமானவை.

மேலும், மாவடிப்பள்ளி - கல்முனை வீதிக்கான மாற்றுப் பாதை போடப்பட்டு, ஏதோ சதி காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது. அந்த வீதி உயர்த்திப் போடப்படாமையால், பொலிவேரியன் கிராமம் உள்ளிட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மிகவும் பாதிக்கப்பட்டதுடன், அப்பகுதி மக்களும் பெரும் அவலங்களுக்குள்ளாகினர். எனவே, இது தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

அதேபோன்று, ஒலுவில், அஷ்ரப் நகரை ஊடறுத்துச் செல்கின்ற தீகவாபி வீதியையும் கொங்கிரீட் அல்லது காப்பெற் வீதியாக பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. மன்னார் நகரிலிருந்து புகையிரத நிலையத்துக்குச் செல்கின்ற, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கீழ் உள்ள முக்கிமான வீதி இன்னும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றது. அதேபோன்று, முருங்கன் - சிலாவத்துறை வீதி ஆகியவற்றையும் புனரமைப்பு செய்ய வேண்டும்.

மேலும், வட்டுவாகல் பாலத்துக்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் நீங்கள் ஒதுக்கியிருக்கின்றீர்கள். அதற்கு வன்னி மாவட்ட மக்கள் சார்பாக நன்றி கூறுகின்றோம். ஆனால், அதன் மதிப்பீடு 2750 மில்லியன் ரூபாயாகும். எனவே, இது தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நடவடிக்கை எடுக்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, வவுனியா, பரயனாளங்குளம் வீதி, வெளிக்குளம், மாமடுவ வீதியும் இன்னும் புனரமைக்கப்படாமல் இருக்கின்றன. நேரியகுளத்திலிருந்து நெளுக்குளம் செல்கின்ற வீதியில் 12 கிலோமீற்றரில் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. மழை காலங்களில் வெள்ளத்தால் அப்பகுதி பெரிதும் பாதிக்கப்படுகின்றது”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் 5,226 ஏக்கர் நிலம் துறைமுக அதிகார சபை வசம்

**குகதாசன் எம்.பி. சுட்டிக்காட்டு**

கொழும்பு, மார்ச்.09

**இலங்கை துறைமுக அதிகார சபையானது திருகோண மலை மாவட்டம் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அடங்கும் 5,226 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி வைத்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.**

இதேவேளை, துறைமுக அதிகார சபை வசமுள்ள 1882 ஏக்கரில் மக்கள் நீண்ட காலமாக வாழ்கின்றனர். எனவே, குறித்த அதிகார சபையிடமிருந்து 5,226 ஏக்கர் காணிகளையும் விடுவிக்க வேண்டுமென வும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(எ)



## "இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவையை ஆரம்பியுங்கள்"

கொழும்பு, மார்ச்.09

இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"இராமேஸ்வரத்துக்கும் மன்னாருக்கும் இடையிலான கப்பல் சேவை இருந்த காலத்தில், மன்னார் ஒரு பொருளாதார கேந்திர தளமாக விளங்கியது. அன்றைய காலகட்டத்தில், அந்த மக்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டிருந்தார்கள். எனவே, இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, மன்னார் - புத்தளம் வீதி, மன்னாரிலிருந்து மறிச்சுக்கட்டி வரை, புத்தளம் முதல் எலுவன்குளம் வரையிலும் காப்பெற் வீதியாக போடப்பட்டுள்ளது. சிறிய பகுதியே புனரமைப்புச் செய்யப் படாமல் காணப்படுகின்றது. சில அரசு சார்பற்ற நிறுவனங்கள், அவர்களின் சொந்தத் தேவைகளுக்காக, அந்த வீதியை மூடுமாறும் புனரமைக்க வேண்டாம் எனவும் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார்கள். ஆனால், நீதிமன்றம் இந்த வீதியை மூடுமாறு எந்த வித உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. எனவே, அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, சுட்டமா அதிபருடன் பேசி, சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, இந்த வீதியை மக்கள் பாவனைக்கு புனரமைத்துக் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்"- என்றார். (எ)

## சொகுசு ஜீப்புடன் இருவர் கைது!

கேகாலை, மார்ச்.09

தெஹியோவிட்ட மயானத்துக்கு முன்னால் உள்ள ஹோட்டல் ஒன்றில் உள்ள வாகனங்களை பழுது பார்க்கும் இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சொகுசு ஜீப் ஒன்றுடன் ஹோட்டலின் உரிமையாளர் உட்பட இருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீதாவாக்கை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 02 வாகன இலக்கத் தகடுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் சந்தேக நபர்கள் இருவரும் அவிசாவளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## இ.போ.ச. பஸ் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; ஒருவர் படுகாயம்

கொழும்பு, மார்ச்.09

இ. போ. ச. பஸ் - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் சிக்கி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை காலை 07. 40 மணியளவில் கொழும்பு - பாதுக்க, போரேகெதர பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

## தம்பியை கொலை செய்த அண்ணன் தலைமறைவு!

இரத்தினபுரி, மார்ச்.09

இரத்தினபுரி மாவட்டம் எலபாத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அலுபத்கல பிரதேசத்தில் அண்ணனால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு தம்பி கொலை செய்யப்பட்டதாக எலபாத்த பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

எலபாத்த பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்தன.

சம்பவத்தையடுத்து சந்தேக நபரான அண்ணன் பிரதேசத்தைவிட்டு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 24 - 05 - 1940 |  | 21 - 02 - 2025 |

**திருமதி ஆனந்தேஸ்வரி சூரியபிரகாசன்**

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தேஸ்வரி சூரியபிரகாசன் அவர்கள் கடந்த 21-02-2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவசாமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சூரியப்பிரகாசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பூரணி மற்றும் சக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், சேரனின் அன்புப் பேர்த்தியும், சந்திரேஸ்வரி (சாண்ட்ரா), காலஞ்சென்றவர்களான பாஸ்கரன், ஸ்ரீதரன் மற்றும் சுகுணேஸ் வரி(சுகுணா), மனோகரன், இந்துமதி(இந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மருமகள்களுக்கும் மருமகன்களுக்கும் அன்பான அத்தையும் ஆவார்.

ஆனந்தி பி.பி.சியில் 30 ஆண்டுகள் செய்தியாளராகவும் ஒளிபரப்பாளராகவும் பணியாற்றினார், மேலும் அந்தக் காலத்தில் பி.பி.சி. தமிழ் சேவையில் முன்னணி நபராக இருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பி.பி.சிக்காக அவர் நடத்திய பிரத்யேக நேர்காணலுக்காக அவர் எப்போதும் நினைவுகூரப்படுவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : **சக்தி சூரியபிரகாசன் (மகள்)**
Mobile: +447405495422

தகவல் : **குடும்பத்தினர்**

# பாடசாலை மாணவர்களுக்காக 2000 பேருந்துகள் சேவையில்!

கொழும்பு, மார்ச்.08

பாடசாலை மாணவர்களின் பொதுப் போக்குவரத்து வசதிகளைக் கருத்திற்கொண்டு 'சிசு சரிய' திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 2000 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும். பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்பான விவரங்களை கல்வி அமைச்சர் சமர்ப்பிக்க வேண்டுமென போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய பிரதமர் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதிகள் குறித்து சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார். இதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"பொதுப் போக்குவரத்து சேவை தொடர்பில் பிரதமர் தனது உரையில் பல விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார். கல்வி அமைச்சர் என்ற அடிப்படையில் பாடசாலை மாணவர்களின் பொதுப் போக்குவரத்து சேவை தொடர்பிலும் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கை போக்குவரத்து சபையானது சிசுசரிய திட்டத்தின் கீழ் 1500 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துகிறது. இந்த எண்ணிக்கையை இந்த ஆண்டு 2000 ஆக அதிகரித்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய பிரதேங்களில் உள்ள மாணவர்கள் போக்குவரத்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்பான விவரங்களை கல்வி அமைச்சர் என்ற அடிப்படையில் எமக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகே, பேருந்து உரிமம், அனுமதிப் பத்திர மாற்றம் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தார். பேருந்து அனுமதிப் பத்திர சட்டத்தை திருத்தம் செய்யும் வகையில் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரமளவில் சட்ட மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். சட்ட திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் அனுமதிப் பத்திர உரிமத்தை பரிமாறிக் கொள்ளலாம்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
09.03.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், மாசி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு முன்னர்

வழமைபோல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெற்றது - வழமைபோல் வெளிநாட்டுத் தலையீடுகளை எதிர்த்து, உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக பிரச்னைகளை கையாளப் போவதாக இலங்கை அரசாங்கம் கூறியது - தமிழ்ச் சூழலில் முன்னரைப் போல் மனித உரிமைகள் பேரவை தொடர்பான சத்தங்கள் இப்போது வெளி வருவதில்லை. முன்னர் என்றால் இதனை முன்வைத்து சில வாரங்களாக கலந்துரையாடல்கள் இடம்பெறும். களத்திலும் புலத்திலும் பலர் இது தொடர்பில் பேசுவார்கள். ஆனால், இப்போது விடயங்களை நோக்கினால் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது. இவ்வாறான நிலைமை ஏற்படும் என்பதை சிலர் முன்னரே சுட்டிக் காட்டியிருந்தனர்.

ஆனால், அம்புலிமாமா கதையில் வருகின்ற சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போன்று, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழமைபோல் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான புதிய தீர்மானம் அவசியமென்று கூறி, இலங்கை விவகாரத்திற்கு இணையனுசரணை வழங்கும் நாடுகளின் தூதரகங்களுக்கு கடிதம் எழுதியிருக்கின்றார். கடந்த காலத்தில் கடிதத்தை தனியாக எழுத வேண்டாம் எல்லோரும் சேர்ந்து எழுதுங்கள் என்பதை வலியுறுத்தியும் சந்திப்புக்கள் நடந்திருக்கின்றன.

கடந்த பதினைந்து வருடங்களாக பல கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் கடிதம் எழுதுவதால் எதனைச் சாத்துவிட முடியும் எனும் கேள்வியை கேட்கும் போது - கடிதம் எழுதுவதை விட்டால் வேறு என்ன தான் செய்ய முடியும் என்னும் கேள்வியும் கூடவே எழலாம். அவ்வாறான கேள்வியிலும் நியாயம் இல்லாமலில்லை. தமிழ் கட்சிகளால் வேறு என்ன தான் செய்ய முடியும்?

வெளித் தரப்புக்களிடம் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு முன்னர், ஈழ அரசியல் சமூகம் முதலில் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைத்தான் நாம் இந்த இடத்தில் மீண்டும் அழுத்தமாக வலியுறுத்துகின்றோம். இதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஈழநாடு சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆனால், ஈழ அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போர் எவருமே தங்களை சுயபரிசீலனை செய்வதாகத் தெரியவில்லை. ஆகக் குறைந்தது அதற்காக முயற்சிப்பதாகவும் தெரியவில்லை. தங்களுக்குள் பிளவுண்டு, தேர்தல்களில் மோசமான தோல்விகளை சந்தித்து, மக்களையும் பலவீனப்படுத்திய பின்னர் வெளித் தரப்புக்களை நோக்கி கடிதம் எழுதினால், அதனை யார் பொருட்படுத்துவார்? தமிழ் கட்சிகளின் ஆற்றல் தொடர்பில் வாக்களிக்கும் தமிழ் மக்கள் அறியாமல் இருக்கலாம். ஆனால், தூதரகங்கள் நன்கறியும்.

இன்று ஈழத் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை என்று ஒன்றில்லை. கட்சிகளாகவும் குழுக்களாகவும் பிரிந்து கிடக்கும் அரசியல் சூழலில் ஆகக் குறைந்தது ஓர் உறுதியான அரசியல் கூட்டணியாவது இருக்க வேண்டும். அதுவும் இல்லை. இந்த நிலையில் வெளித்தரப்புக்கள் தமிழர்களை எந்த அடிப்படையில் கருத்தில் கொள்வது? இந்த நிலையில் தற்போதைய அரசியல் சூழல் இன்னும் நெருக்கடியானதாக மாறிவிட்டது. தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் - குறிப்பாக வடக்கு மாகாண மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்திருக்கின்றனர். பாரம்பரிய தமிழ் கட்சிகள் மோசமான தோல்வியை சந்தித்திருக்கின்றன. இந்த நிலையில் எந்த அடிப்படையில் வெளியாரை நோக்கி அழுத்தங்களுக்கான கோரிக்கையை தமிழ் கட்சிகள் கோர முடியும்?

இந்த விடயங்களை கருத்தில் கொண்டு முதலில் உள்ளூராட்சித் தேர்தலில் அனைத்து கட்சிகளும் ஒரணியாக நின்று, தமிழ் மக்கள் அவர்களது எந்தவோர் அரசியல் கோரிக்கையும் கைவிட்டுவிடவில்லை. அப்படி விட்டுவிடவும் மாட்டார்கள் - அதனோடுதான் உறுதியாக பயணிக்கின்றனர் என்பதை தேர்தல் முடிவுகள் மூலம் நிரூபித்துக் காட்டுங்கள். அவ்வாறில்லாது மற்றவர்களை நோக்கி முறைப்பாடுகளை செய்து கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. தமிழ் மக்கள் உங்களோடு நிற்கின்றனர் என்பதைக் காண்பித்தால்தானே, மற்றவர்கள் உங்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொள்வார்கள்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 09

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது நேற்று வரை தொடர்ந்து இடம்பெற்றுகின்றது.



இந்த நிலையில், 8 வருடங்களுக்கு மேலாக நீதி கோரி போராட்டம் மேற்கொண்டு வரும் முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டமானது நேற்று காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு, வட்டுவாகல் பாலம் ஊடாக பேரணியாக சென்று வட்டுவாகல் பகுதியில் தமது உறவுகளை இறுதியாக கையளிக்கப்பட்ட இடம்வரை சென்று நிறைவடைந்தது.

போராட்டத்தின்போது சர்வதேசமே பதில் சொல், சர்வதேசமே எமக்கான தீர்வு என்ன!?, பிள்ளைகளை தினம் தேடிக் கொண்டே நீதியின்றி இறந்து கொண்டிருக்கின்றோம், கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம்!, எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும், தமிழரை கடத்தாதே! இனவழிப்பு செய்யாதே! உங்கள் சிறைக்கூடம் எங்கள் பிள்ளைகளுக்கு என்ன கல்விக்கூடமா? எமது நாட்டில் நாம்வாழ உரிமையில்லையா? உலகமெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந்நாளிலும் தெருவில் கிடந்து அழவைத்திருக்கிறது அரசு போன்ற பல கோசங்களையும் எழுப்பி பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தை மேற்கொண்டனர்.

குறித்த போராட்டத்தின் போது வட்டுவாகல் விகாரைக்கு செல்லும் வீதியில் அதிகளவவான பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கில் சிறுபோகத்தில் நவீன தொழில்நுட்ப வசதி

## கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, மார்ச் 09

வடக்கு மாகாணத்தில், இந்த வருடத்திற்கான சிறுபோகச் செயகையில், நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, விவசாய உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், மாகாண நீர்ப்பாசன மற்றும் விவசாய பணிப்பாளர்கள், ஐந்து மாவட்டங்களின் விவசாயப் பணிப்பாளர்கள், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதன் போது, நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தல் தொடர்பில் ஆராயப்பட்டது. (அ)

# இலங்கைப் படகு தமிழகத்தில் மீட்பு!

சென்னை, மார்ச் 09

தமிழகத்தில் இலங்கை படகு ஒன்றை இந்திய கடலோரப் பாதுகாப்பு அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே பெரியதாழை பகுதியில், நடுக்கடலில் இலங்கை படகு ஒன்று கவிழ்ந்த நிலையில் மிதந்துள்ளது.


அப்பகுதிச் சென்ற மீனவர்கள், அந்த படகை மீட்டு கடற்கரைக்கு கொண்டு வந்தனர். 30 ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான அந்த படகில், இலங்கை அரசின் முத்திரை காணப்பட்டதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.




இது குறித்த தகவலின் பேரில் தட்டார்மடம் பொலிஸார் மற்றும் கடலோரப் பாதுகாப்பு அதிகாரிகள் அந்த படகை ஆய்வு செய்தனர்.

இந்த படகு சட்டவிரோத செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்ல நூலகங்களின் எதிர்காலம்!

தனக்குப் பின்னால் தன் சொத்துகளை யாருக்கு எவ்விதத்தில் சேர்ப்பது என்கிற கவலையும் அக் கறையும் முதுமைக் காலத்தில் செல் வந்தர்களுக்கு வருகி றதோ இல்லையோ, ஆர்வக் கோளாறில் வாங்கிச் சேர்த்த, வாசித்து மகிழ்ந்த புத் தகங்களை என்ன செய்வது என்கிற கவலை, பல மூத்த வாசகர்களுக்கு வந்துவிடுகிறது.

'சிறுதுளி பெருவெள்ளம்' போல, ஒரு நூல், பல நூல் களை வாங்கவும், சேகரிக்கவும் வைத்துவிட்ட நிலையில், பெருகியவற்றை உரிய முறையில் பராம ரிப்பது எப்படி என்கிற கவலைபோய், இவற்றை உரியவர்கள் எவரென்று தேடிக் கொடுப்பதில் சிக்கல் கள் எழத் தொடங்கியிருக் கின்றன. உடுத்திக் கொள்ள ஓரிரண்டு உருப்படிகளுக்கு மேல் வேண்டாம் என்று சொல்லத் தெரியாத மனதுக்கு, படித்துக் கொள்ளக் கூடுதலாகப் புத்தகங்கள் வாங்கினால் என்ன என்ற தன்மை எப்படி வரும்? செலவை விடவும் அவற்றைச் சேமிக்கவும் பாதுகாக்கவும் செய்கிற முறைமை தெரிய வில்லையே!

வளரும் குழந்தைக்கு அழகிய ஆடையை வாங்கி அணிவித்து மகிழ்வதுபோல, புதிய நூலுக்கு உரிய வண்ணம் அட்டைபோட்டு வரிசைப்படுத்தி, அடுக்கி வைத்து, அவ்வப்போது வாசித்து மகிழும் பெரியவர்க ளைப் பார்த்துப் பிரமித்துப் போயிருக்கிறேன். அந்தந்தப் புத்தகங்களின் அரிய, அற்புத வரிகளை அடிக்கோடிட் டும், தனிக்குறிகள் அமைத்தும் பேணி இருப்பது, வாசிப் பின் கணங்களைப் பொருத்தது அல்ல, வாழ்நாள் முழுவ தும் நேசிப்புக்கு உரிய நிலையில், நித்தமும் தன் வாழ்நா ளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுகலாறுகளை அவை தூண்டித் துணை நிற்கும் என்பதற்காகவும், அதுமட்டு மல்ல, அடுத்து எடுத்துப் படிக்க நேர்கையில் அந்த வரி களை, கருத்துகளைப் படித்தாலே, அந்த முழு நூலையும் படித்து உணர்ந்துகொள்ள வேண்டிய தேவையை முழுமை செய்துவிடும் என்பதற்காகவும்தான்.



பரிந்துரை செய்து அவற்றைப் படிக்கத் தரும் புத்த கப் பிரியர்கள், அவற்றைப் பிரிய மனமின்றி, உடன் பதிவு செய்து திரும்பத் தரவேண்டிய நாளையும் குறிப்பிட்டு, வரவு செலவுக் கணக்கு வைத்து, மாதம் ஒருமுறையோ, வருடம் மும்முறையோ கணக்குப் பார்த்துத் திரும்ப வசூலித்துவிடுவதையும் கண்டிருக்கிறேன். சில சமயங்க ளில் வாசிப்புப் பழக்கம் வளர்வதற்கென்றே, அவற்றைப் பரிசுப் பொருளாய் வழங்கிவிடுகிற பெருந்தன்மையை யும் உணர்ந்திருக்கிறேன்.

எத்தனை பிறவி எடுத்தாலும் வாசித்து முடியாத அள வுக்கு வளர்ந்து வளர்ந்து பெருகி வருகின்றன புத்தகங் கள். அவற்றுக்கு நடுவே, படித்த பக்கங்களை மீளவும் படிக்கச் சொல்லி வலியுறுத்தும் புத்தகங்களைப் பார்க்கி றபோது எழுகிற ஏக்கப் பெருமூச்சு எழுதி அடங்குமா, என்ன? வங்கிக் கணக்கின் இருப்பையும், வாங்கிச் சேர்த்த நகைகளையும், மிஞ்சி இருக்கிற பொருள்களையும் பங்கு போட்டுக் கொள்வதில் வாரிசுகளுக்கு இருக்கிற அக்க றையும் ஈடுபாடும், வாசித்து மகிழ்ந்து சேகரித்து வைத்தி ருக்கும் புத்தகங்களின் மீது இல்லையே என்கிற அறிவு சார்ந்த வருத்தத்தை வாசகப் பெரியார் ஒருவர் ஆதங்கமா கத் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் மலர்க்கூட்டத்தை நாடி வண் டுகள் படையெடுத்ததுபோல், நடை சார்த்துமுன் கோயிலுக்கு விரையும் பக்தர்களைப் போல், அரசு நுலகங்களுக் குச்சென்று அறிவுத் தாகத்தைத் தணித்துக் கொள்ளப் பலரும் வருவதைப் பார்த்திருக்கிறேன். இன்றைக் குக் கைப்பேசி வந்து மொத்தத்தையும் சூறையாடி விட்டதே! இணைய வழி நூல் கள், இதழ்கள் என வாசிப்பின் போக்கு வேறு விதம் ஆகியிருக்கிறது. அது வாசிப்புத் தரத்தையும் வாழ் வின் மீதான நேசிப்புப் பழக்கத்தையும் மேம்படுத்தி யிருக்கின்ற னவா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது.

பசிக்கு உணவும் ருசிக்கு நொறுக்குத் தீனியும் வாங் கித் தருவதுபோல, அறிவை விரிவு செய்யும் ஆழம் வாய்ந்த புத்தகங்களையும், எளிய வாசிப் புக்கு ஏற்ற பத் திரிகைகளையும் வாங்கித் தருகிற பழக்கம் பெற்றோர்க ளுக்கு வேண்டும். பிறந்த நாள், திருமண நாள் என்று வாழ்வின் மகிழ்வுக்கு உரிய நாள்களை நினை வுபடுத்தி வழங்குகிற பரிசுப் பொருள்களில் புத்தகங்கள் இருந்தன. மணிவிழா, பவளவிழா, முத்துவிழாக் காலங்க ளில் பல பக்தி நூ ல்கள் அன்பளிப்பாக அளிக்கப்பெற்றன. ஏன், நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டும்கூட, தேவார, திரு வாசகத் தொகுதிகள் வாங்கியோ, வேண்டும் வண் ணம் தொகுத்து அச்சிட்டோ கொடுக்கப்பெற்றன. இன்றைக்கு?

வயிற்றுப் பசியெடுத்து உயிர் துடிப்பதுபோல, வயி றார உண்ட பின் தினவெடுத்து உடல் இயக்க, புலன் ஒடுக்கத் தெரியாமல் அலையும் மனத்தை ஒருநிலைப் படுத்த புத்தகங்களைப்போல், ஒரு காப்பாளன் இல்லை என்பதை இந்தத் தலைமுறைக்கு முறையாக எடுத்துச் சொல்லத் தெரியவில்லையே! கேளிக்கைச் சாதனமான காட்சி ஊடகங்களைவிட, கேள்வித் திறன் வளர்க்கும் அச்சு ஊடகங்களின் பயன்பாடு குறைந்ததுகூட, இன்றைய அறமீறல்களுக்கு, பொதுவாழ்வின் அத்துமீறல்களுக்குக் காரணமாக இருக்கலாம்.

எப்போதும் நலம் பயக்கும் பெருஞ்செல்வம் நூலகம் - அது நம் வீட்டின் ஓர் அங்கம் என உணர்ந்து பேணு வது அனைவர்க்கும் கடமை எனச் சொல்லியா தெரிய வேண்டும்? ●

## இந்தவார ராசிபலன் 09.03.2025 - 15.03.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - மாசி 25

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : ஏகாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வீக சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். விரும்பிய ஆடை, ஆபரணங்கள், பிடித்தமான நல்ல உணவு, ஆகியவை கிடைக்கும். அறிஞர்கள் நிறைந்த மேடைகளில், கௌரவப் பட்டங்கள் உங்களை அலங்கரிக்கும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வெளியூர் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தாய்வழி உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது. உறவினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குக் காரியத் தடைகள், கால தாமதங்கள் காரணமாக பின்னடைவுகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத காரியங்களுக்காக அலைய நேரும். சிலருக்குக் கையிருப்பு குறைந்து பண தட்டுப்பாடு ஏற்படும். இடுக்கண் களைய உதவும் உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். செய்தொழிலில் எதிர்பார்த்தபடி நல்ல முன்னேற் றங்கள் இருக்கும். வாக்குவன்மையால் பொருளாதார உயர்வு ஏற்படும். பூஜை வழிபாடுகள் மூலம் தடைப்பட்டு வந்த காரியங்கள் அனைத்தும் விரைவாக நடைபெறும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கட்டுக்கு அடங்காத செலவுகளால் மனஅமைதி குறை யும். ஆயினும், புதுப்புது முயற்சிகளால் தனவரவு அதிகரித்து கேளிக்கை ஈடுபாடு, இனிய பயணங்கள் ஆகியவை ஏற்பட்டு சந்தோஷம் தரும். மக்களிடம் தங்கள் விற்பனைத் திறமைகளைக் காட்டி வியாபாரத்தில் லாபத்தை அதிகரித்துக் கொள்வர். அரசு அதிகாரிகள் சந்திப்பு அனுகூலமாக இருக்கும். புதிய பெண்களின் நட்பு மனக்களிப்பு தரும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற இனிய சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவி யுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் இலாபம் ஏற்படும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பெரி யோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். எதையும் துணிகரமாக எடுத்து மேற்கொள்ளும் தனித்திறன் உங்களிடம் இருப்பதால் வாழ்க்கையில் உச்சத்துக்குச் செல்வீர்கள். பிள்ளைப்பேறு, தொழில் வாய்ப்புக்கள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷ யத்தைப் பொருத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பல ஆன்மிகக் கருத்துக்களைக் கேட்பதின் மூலமாக ஞானத்தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத் தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் மூலமாக தொழிலில் அதிகமான வருவாய்ப் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரும். சுபகாரியச் செலவுகள் ஏற்பட்டு வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நண்பர்களுடன் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி பொங்கப் பொழுதைக் கழிப்பீர்கள். எல்லாவகை யிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடமும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் தாமதமின்றி சாதகமாக நிறைவேறும். தொழிலில் புதிய விரிவாக்கம் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். . பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நல்லதும், கெட்டதுமாகக் கலந்த பலன்கள் ஏற்படும் ஆதலால் பக்தி மார்க்க ஈடுபாடு நல்ல பலன் தரும். சாதிக்கத் துடிக்கும் உங்கள் கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றி அனைவரின் பாராட் டினையும் பெற்றுத் தரும். உஷ்ணம் காரணமான உபாதைகள் ஏற் படும். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணி புரியும் பெண்களுக்குத் தற்போது இருக்கும் வேலையைவிட வேறு வாய்ப்புகள் அமையும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாகப் பணவரவு அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும். வழக்குகளில் நிச்சயமாக வெற்றி கிடைக்கும். அக்கம் பக்கத்தில் தேவையற்ற விவகாரங்களில் மூக்கை நுழைக்காதிருப்பது நல்லது. மனைவி, குழந்தைகளிடம் மனம்விட்டு சிரித்துப் பேசி மகிழுங்கள். பெண்கள் தங்களை அழகு படுத்திக்கொண்டு, அழகை வெளிக்காட்டும் வகையில் பல விழா நிகழ்வுகள் கைகொடுக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் இலாபம் பெருகும். பலன் அளிக்கக் கூடிய இனிய பயணங்கள் பலவற்றை மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கேற்ற, சக்தி மிக்க, அதிகாரமிக்க பதவிகள் உங் களைத் தேடிவரும். நெருங்கிய உறவுகளை அனுசரித்துச் சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். அவர்களால் பாராட்டவும் படுவீர்கள். வேலையில் சிரத்தையும், கடின உழைப்புமே தொழிலில் நல்ல முன் னேற்றங்களைத் தரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத் திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறு வதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். சுபச் செய்திகளால் மனம் மகிழும். வெளிநாட் டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தனலாபம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நாடு அநுராவோடு, ஊர் எங்களோடு"



வீரகத்தி தனபாலசிங்கம்

# சுமந்திரனின் சுலோகம் உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் மக்களிடம் எடுபடுமா?

நீண்டகாலமாக தாமதிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்களை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியிருக்கிறது. அரசியல் கட்சிகளும் குழுக்களும் மார்ச் 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நியமனப் பத்திரங்களை கையளிக்கலாம். அனேகமாக மே மாத முற்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தோல்வி கண்ட அரசியல் கட்சிகள் மீண்டும் ஒரு தேர்தலுக்கு முகங்கொடுக்கக்கூடிய அளவுக்கு தங்களை தயார்படுத்திக்கொள்ளக் கூடிய வலுவுடன் இல்லை என்ற போதிலும், போட்டியிட வேண்டிய அரசியல் நிர்ப்பந்தம் அவற்றுக்கு இருக்கிறது. தெற்கில் உள்ள பழைய கட்சிகளையும் வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளையும் பொறுத்தவரை, இரு தேசிய தேர்தல்களுக்கு பின்னரான புதிய அரசியல் சூழ்நிலையில் தங்களுக்கு ஒரு பொருத்தப்பாட்டை தேடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. அதனால் உள்ளூராட்சி தேர்தல்களை எதிர்கொள்வதற்கு கூட்டணிகளை அமைக்கும் முயற்சிகளில் அவை இறங்கியிருக்கின்றன.

நீண்டகாலமாக அரசியலில் ஆதிக்கம் செலுத்திவந்த ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) க்கு இருந்த மக்கள் ஆதரவைக்கூட தற்போது கொண்டிருக்கவில்லை. ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன எந்த வேகத்தில் மக்கள் மத்தியில் அமோக செல்வாக்கைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியதோ அதே வேகத்தில் அதிகாரத்தையும் ஆதரவையும் இழந்து நிற்கிறது. குறைந்தளவு மக்கள் ஆதரவுடன் என்றாலும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியே இரண்டாவது பெரிய அரசியல் சக்தியாக விளங்குகிறது.


ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒரு இணக்கப்பாடுக்கு வந்து உள்ளூராட்சி தேர்தல்களை கூட்டாக எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசிய கட்சி அண்மைக்காலமாக மேற்கொண்ட முயற்சிகளில் பரவலாக எதிர்பார்க்கப்பட்டதை போன்றே முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை. இரு கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகள் இணைந்து செயற்படுவதற்கு விரும்புகின்ற போதிலும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான தன்னகம்பாவப் போட்டி இதற்கு பிரதான முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. அதனால், இரு கட்சிகளும் உள்ளூராட்சி தேர்தல்களைக் கூட்டாகச் சந்திப்பதற்கான வாய்ப்பு பெரும்பாலும் இருக்காது.

அதேவேளை, ஆளும் கட்சியான ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரை, அதன் கடந்த ஐந்து மாதகால ஆட்சி மீதான ஒரு வாக்கெடுப்பாக உள்ளூராட்சி தேர்தல்கள் அமையப்போகின்றன. பழைய அரசியல் கட்சிகளை நிராகரித்து பெரும் எதிர்பார்ப்புகளுடன் தேசிய மக்கள் சக்தியை மக்கள் அதிகாரத்துக்கு கொண்டுவந்த போதிலும், பொருளாதார இடர்பாடுகளில் எந்தவிதமான குறிப்பிடத்தக்க தணிவையும் காணமுடியாமல் இருப்பதால் அவர்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். நடைமுறைச் சாத்தியத்தைப் பற்றி சிந்தித்துப் பார்க்காமல், இரு தேசிய தேர்தல்களிலும் மக்களுக்கு வழங்கிய பெருவாரியான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் அரசாங்கம் தடுமாறுகிறது. ஆனால், அதற்காக எதிர்க்கட்சிகளை உள்ளூராட்சி தேர்தல்களில் பெருமளவில் ஆதரிக்கக்கூடிய அளவுக்கு மக்களின் மனங்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டுவருகிறது என்று கூறிவிட முடியாது.

கடந்த ஜனாதிபதி தேர்தல்களில் வாக்களிக்காதவர்களின் தொகையை விடவும் பாராளுன்ற தேர்தல்களில் வாக்களிக்காதவர்களின் தொகை மிகவும் அதிகமானதாகும். ஒரு ஏழு மாதகால இடைவெளியில் மூன்று தேர்தல்களைச் சந்திக்க நிர்ப்பந்திக்கப்படுவதாலும் தாங்கள் ஆட்சிக்கு கொண்டுவந்த அரசாங்கம் தங்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இயலாததாக இருப்பதாலும் மக்கள் உள்ளூராட்சி தேர்தல்களில் எந்தளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் என்பது முக்கியமான ஒரு கேள்வி.

இது இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் பின்னடைவைக் கண்ட தமிழ் அரசியல் கட்சிகளும் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுவதற்காக மீண்டும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடும் பிரயத்தனங்களில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவை பெருமளவில் பெற்று இரு மாகாணங்களிலும் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றிய தனியான கட்சியாக விளங்குவதற்கு காரணம் தங்களது கடந்த கால செயற்பாடுகளே என்பதை தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இதுவரையில் முழுமையாகப் புரிந்து கொண்டார்களோ தெரியவில்லை.



> **ஒன்றிணைந்து போட்டியிடாத காரணத்தினால் மாத்திரம் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு மக்கள் தங்களை நிராகரித்ததாக தமிழ் கட்சிகளின் தலைவர்கள் நினைப்பார்களாக இருந்தால் அவர்கள் மீண்டும் தவறு செய்வதாகவே அமையும்.**

தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சியை, எதிர்காலத் தேர்தல்களை நோக்கமாகக் கொண்டு அல்லாமல், வேறு காரணத்துக்காக முன்னெடுப்பதாக முதலில் கூறியவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொனானம்பலம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை முன்னெடுக்கும்போது தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு யோசனைகளை தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து முன்வைப்பதை நோக்கமாகக்கொண்டதே தனது முயற்சி என்று அவர் அறிவித்தார். இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடனும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுடனும் பொன்னம்பலம் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தை யாழ்ப்பாணத்தில் நேரில் சந்தித்து பொன்னம்பலம் ஒத்துழைப்பைக் கோரி கடிதம் ஒன்றையும் கையளித்தார். ஆனால், தமிழரசு கட்சி அரசியலமைப்பு வரைவுச்செயன்முறை தொடர்பிலான அதன் நிலைப்பாட்டை அவருக்கு அறிவித்ததை அடுத்து அவரது முயற்சி தடங்கலுக்கு உள்ளானது. அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு பின்னரே புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை முன்னெடுக்கவிருப்பதாக அறிவித்திருப்பதால், அந்த விவகாரத்தில் தற்போது அவசரப்பட வேண்டியதில்லை என்ற தொனியில் தமிழரசு கட்சியின் பதில் அமைந்திருந்தது. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தினால் எந்தவிதமான அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனையும் முன்வைக்கப்படாத நிலையில் தமிழ்க் கட்சிகள் அது தொடர்பில் ஆராய்வதற்கு எதுவுமில்லை என்பதே தமிழரசு கட்சியின் நிலைப்பாடாக இருந்தது.

முதலில் பொன்னம்பலத்துடன் ஒத்துழைத்துச் செயற்படுவதில் அக்கறை காட்டிய சிறீதரன் தனது கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த ஒத்துழைப்பை தொடர்வதில் அசௌகரியத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தமிழரசு கட்சியின் செயல்பாடுகள் தொடர்பிலான சகல தீர்மானங்களையும் மேற்கொள்ளும் மத்திய செயற்குழுவில் சிறீதரன் செல்வாக்கைச் செலுத்த முடியாத ஒரு நிலை தற்போது காணப்படுகிறது. அவரை எதிர்த்து கடந்த வருடம் ஜனவரியில் தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற முடியாமல் போன முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனே இன்று அந்த கட்சியை வழிநடத்துகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். அவர் இப்போது கட்சியின் பதில் பொதுச் செயலாளராவும் இருக்கிறார்.

அதனால் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை தொடர்பிலான கட்சியின் நிலைப்பாடு சுமந்திரனின் அணுகுமுறைகளின் அடிப்படையிலேயே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஜனாதிபதி தேர்தல் உட்பட பல்வேறு விவகாரங்களில் கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராக வெளிப்படையாகச் செயற்பட்டுவந்த சிறீதரன் புதிய அரசியலமைப்பு விவகாரத்தில் பொன்னம்பலத்துடன் சேர்ந்து தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியை தொடருவதில் ஏன் நாட்டம் காட்டவில்லை என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து யோசனைகளைச் சமர்ப்பிப்பதை நோக்கிய முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படாமல் இருக்கிறது. கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு வழமைக்கு மாறாக, பொன்னம்பலம் தமிழரசு கட்சியுடன் (குறிப்பாக சிறீதரனை தலைவராகக் கொண்ட அதன் பாராளுமன்றக் குழுவுடன்) ஒத்துழைத்துச் செயற்படுவதில் அக்கறை காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் பிரச்னைகளுக்கு தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு தமிழரசு கட்சி இன்றியமையாதது என்றும் அது பாராளுமன்ற தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பது ஜனநாயக விரோதமானது என்றும் பொன்னம்பலம் வெளிப்படையாக கருத்து வெளியிட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையின் போது தமிழ்க்கட்சிகள் எடுக்கவேண்டிய நிலைப்பாடுகள் தொடர்பில் மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் நடத்தப்படக்கூடிய பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கு ஏழு பேரைக் கொண்ட குழுவொன்றை ஜனவரியில் தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு நியமித்தது. அந்த குழுவில் சிறீதரனும் ஒரு உறுப்பினர் என்ற போதிலும், தமிழரசு கட்சி பாராளுமன்றக் குழுவின் தலைவர் என்ற வகையில் அவர் பொன்னம்பலத்தின் முயற்சிகளில் தன்னிச்சையாக பங்கேற்பதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை புரிந்து கொள்வதில் எவருக்கும் சிரமம் இருந்திருக்காது.

இத்தகையதொரு பின்புலத்தில், தமிழரசு கட்சியின் பதில் தலைவரான சிவஞானம் செயலிழந்துபோன தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு புத்துயிர் அளிப்பதற்கான ஒரு முயற்சியில் அண்மையில் இறங்கினார். இந்த நோக்கத்துக்காக அவர் கூட்டமைப்பின் முன்னைய பங்காளிக் கட்சிகளான தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகியவற்றின் தலைவர்களை அணுகினார். அவர்களுக்கு கடிதங்களையும் அனுப்பினார்.

மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயற்படுவதில் நாட்டம் இருப்பது போன்று கருத்துக்களைக் கூறி சிவஞானத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்திய இந்த மூன்று கட்சிகளின் தலைவர்களும் மறுநாள் ஒன்றுகூடி தங்களது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் வேறு ஆறு தமிழ்க் குழுக்களையும் சேர்த்துக் கொண்டு உள்ளூராட்சி தேர்தலுக்கான ஒரு கூட்டை அமைத்துக் கொண்டனர். இதனால் அதிருப்தியுற்ற தமிழரசு கட்சியின் தலைவர் அதை ஆட்சேபித்து கடிதம் எழுதினார். அதற்கு புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஒரு பதிலையும் அனுப்பினார்.

மீண்டும் கூட்டமைப்பை அமைக்கவேண்டிய தேவையில்லை என்பதும் ஏற்கெனவே தாங்கள் அமைத்திருக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் இணைந்து செயல்பட தமிழரசு கட்சி முன்வருவதே பொருத்தமானது என்பதுமே அந்த கூட்டணியின் தலைவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. கடந்த வருட முற்பகுதியில் தமிழரசு கட்சியின் தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற கையோடு சீறீதரனும் சகல தமிழ் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு முயற்சிகளை முன்னெடுக்கப்போவதாக அறிவித்தார். புதிதாக கூட்டமைப்பு எதுவும் தேவையில்லை என்று கூறிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒன்றிணைந்து செயற்படுவதில் அக்கறை இருந்தால் தமிழரசு கட்சி தங்களது கூட்டணியில் இணையலாம் என்று குறிப்பிட்டிருந்தார்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் பதிலளிப்பதற்கு நவாஸ் ஆணைக்குழு அறிக்கை முக்கியமானது



கலாநிதி ஜெகான் பெரேரா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர்கள் இலங்கை தொடர்பான சர்ச்சையை பொறுத்தவரை, கிரமமாக கவனத்துக்குரியவையாக இருந்து வருகின்றன. மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து போரின்போதும் போருக்கு பின்னரும் இழைக்கப்பட்ட மனித உரிமைமீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரும் பல்வேறு தீர்மானங்கள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. அடுத்தடுத்து பதவிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள் இந்த தீர்மானங்களை கடுமையாக எதிர்த்தன.

மனித உரிமைகள் பேரவை இரண்டகமாக நடந்து கொள்வதாகவும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதாகவும் அரசாங்கங்கள் குற்றஞ்சாட்டின. தேசியவாத சக்திகள் தங்களை அணிதிரட்டுவதற்கும் சர்வதேச சமூகம் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக மக்களின் கோபத்தைக் கிளறிவிடுவதற்கும் மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகளை பயன்படுத்தி வந்திருப்பதனால் நாட்டின் பிளவுகள் மேலும் ஆழமாகின.

ஆனால், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கையின் அணுகுமுறையில் தெளிவாகத் தெரியக்கூடிய ஒரு நகர்வை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அரசாங்க தூதுக் குழுக்கள் மனித உரிமைகள் பேரவையின் பிரதிநிதிகளுடன் சச்சரவில் ஈடுபட்ட முன்னைய வருடங்களைப் போலன்றி, இந்த தடவை அரசாங்க பிரதிநிதிகள் சர்வதேச மனித உரிமைகள் நியமங்கள் மீதான அரசாங்கத்தின் பற்றுறுதியை வலியுறுத்தும் உரைகளை நிகழ்த்தினார்கள்.

போருக்கு பின்னரான தேசிய நல்லிணக்க விவகாரங்களை கையாளுவதற்கு அரசியலமைப்பு வரையறைக்குள் சுயாதீனமானதும் நம்பகத்தன்மை கொண்டதுமான உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பிலான இலங்கையின் பற்றுறுதியை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் மீண்டும் வலியுறுத்தினார். காணாமல்போனோர் விவகார அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் போன்ற நிறுவனங்கள் வலுப்படுத்தப்படும் என்றும் அவர் ஜெனீவாவில் உறுதியளித்தார்.

'இனம், மதம், வர்க்கம், மற்றும் சாதி பாகுபாடோ அல்லது பிளவுகளோ இன்றி, மக்களின் பல்வகைமையை மதித்துக் கொண்டாடுகின்ற ஐக்கியப்பட்ட ஒரு இலங்கையை கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உறுதிப்பாட்டுடனும் மனப்பூர்வமாகவும் பற்றுறுதி கொண்டிருக்கிறது. எமது நாட்டில் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துகின்ற இனவாதம் அல்லது மதத்தீவிரவாதம் மீண்டும் தலைகாட்டுவதற்கு நாம் இடங்கொடுக்கப்போவதில்லை. எமது அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டிருக்கும் அடிப்படையானதும் நிலைபேறானதுமான ஜனநாயக மற்றும் சுதந்திர கோட்பாடுகளை நாம் முழுமையாக மதித்துப் பேணிப்பாதுகாக்கின்ற அதேவேளை, சகல குடிமக்களினதும் மனித உரிமைகளையும் பாதுகாப்போம்.

'எந்தவிதமான அச்சமோ அல்லது பாரபட்சமோ இன்றி ஒவ்வொரு குடிமகனும் தனது மதத்தைப் பின்பற்றுவதற்கும் மொழியைப் பேசுவதற்கும் தனது கலாசார விழுமியங்களின் பிரகாரம் வாழ்வதற்கும் சுதந்திரத்தைக் கொண்டிருப்பதாக உணரவேண்டும். எவருமே தங்களது நம்பிக்கைகளோ, கலாசாரமோ அல்லது அரசியல் சார்போ தகாத முறையில் நெருக்குதலுக்கு அல்லது தப்பபிப்பிராயத்துக்கு இலக்குகளாகும் என்று உணரக்கூடாது" என்றும் வெளியுறவு அமைச்சர் மேலும் கூறினார்.

ஆனால், அவரது உரை இலங்கையை பெருமைப்படுத்திய அதேவேளை, அது பெருமளவுக்கு மனித உரிமைகள் மீதான பரந்த கடப்பாடுகளைப் பற்றியதாக இருந்ததே தவிர, போர்க்குற்றங்கள், ஆட்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள், நாட்டின் வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கல் பற்றிய திட்டவட்டமான முறைப்பாடுகளைக் கையாளவில்லை. உதாரணமாக, போரின் இறுதிக் கட்டங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து சுயாதீனமான விசாரணையொன்றை நடத்துவதற்கு மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு ஆணை வழங்கி 2014 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 25-1 தீர்மானத்தைக் கூறலாம்.

மேலும், எதிர்காலத்தில் வழக்குத் தொடுப்பதற்கு வசதியாக போர்க்குற்றங்கள் தொடர்பில் சான்றுகளைச் சேகரித்து பேணிவைப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகத்துக்கு ஆணை வழங்கி 2021 ஆம் ஆண்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானங்களை எல்லாம் அரசியல் நோக்கம் கொண்டவையாகவும் நாட்டின் இராணுவத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் நேர்மையற்ற முறையில் குறிவைப்பவையாகவும் நோக்கிய அரசாங்கங்கள் அவற்றை நிராகரித்தன.

இந்த விமர்சனங்களுக்கு மத்தியிலும், பொறுப்புக்கூறலுக்காக சர்வதேச சமூகம் தொடர்ந்து நெருக்குதலை கொடுத்துவந்தது. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை பொறுப்புக்கூறல் செயல்திட்டம் 2024 அக்டோபரில் நீடிக்கப்பட்டமை கடந்த காலத்தில் இடம்பெற்றவை பற்றிய உண்மையை உறுதி செய்வதற்கும் போர்க்காலத்தில் போர்க்குற்றங்களைச் செய்தவர்களுக்கும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் இலங்கை போதுமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்ற சர்வதேச சமூகத்தின் எண்ணத்தை தெளிவாக வெளிக்காட்டியது.




**காணிகளை திருப்பிக் கையளித்தல், தடுப்புக்காவல் கைதிகளை விடுதலை செய்தல் மற்றும் இராணுவமய நீக்கம் போன்ற மையப் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்துடனான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு உதவும் என்பது மாத்திரமல்ல, உள்நாட்டில் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் பங்களிப்பையும் செய்யும்.**

இதற்கு ஜெனீவாவில் பதிலளித்த வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் , 'சகல இலங்கையர்களினதும் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஒரு செயன்முறையை உறுதி செய்வதற்கு நடைமுறை செயற்படுத்துவதற்கு முன்னதாக சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுடனும் சாத்தியமானளவுக்கு பரந்தளவில் கலந்தாலோசனைகளை நடத்தி உண்மையின் எல்லைகளும் நல்லிணக்க கட்டமைப்பும் தீர்மானிக்கப்படும்" என்று கூறினார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றின் தீர்வு நாட்டுக்குள் நன்றாக வேர்விட்டு படிமுறை வளர்ச்சியைக் கண்டிருக்கும் ஒரு கோட்பாடாகும். மனித உரிமைகள் தொடர்பான முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புக்களை விசாரணை செய்த உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையிலான ஆணைக்குழுவின் விதப்புரைகள் இதை தெளிவாகக் காட்டுகின்றன. முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளை கண்டறியும் பாரிய பணி நவாஸ் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

2022 ஆம், 2023 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அந்த ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கைகளும் 2024 ஜனவரியில் சமர்ப்பிக்கப்பட்ட அதன் இறுதி அறிக்கையும் இலங்கையின் மனித உரிமைகள் பரப்பு பற்றிய ஒரு விரிவான ஆய்வை வழங்கியது. கடந்த கால அநீதிகளை முறைப்படி கையாளுவதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்கும் எதிர்காலத்தில் முரண்நிலையை தடுப்பதற்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை இலங்கை அமைக்க வேண்டும் என்ற தெளிவான பதிலை அந்த அறிக்கை வழங்கியது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்பதே நவாஸ் ஆணைக்குழுவின் மிகவும் முக்கியமான விதப்புரையாகும்.
ஆணைக்குழுவின் அறிக்கையின் 1043 வது பந்தி பின்வருமாறு கூறுகிறது.

'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பாரதூரமான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் பற்றிய வரலாற்று பதிவேடு ஒன்றை வழங்கவும் மனித உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்துவதற்கு சட்டம் மற்றும் நடைமுறையில் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை ஊக்குவிக்கவும் முடியும் என்பதில் சந்தேகமில்லை. எதிர்காலத்தில் மீறல்களை தடுப்பதற்கும் சட்டத்தை மதித்து நடப்பதை மேம்படுத்துவதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் பரிகாரமும் கிடைப்பதற்கு வழிமுகைளை வழங்குவதற்கும் பாரதூரமான மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வது முக்கியமானதாகும்."

அதிகாரபூர்வமான வரலாற்று பதிவேடு ஒன்றை நிறுவுவதன் மூலம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் தவறான தகவல்களை இல்லாமல் செய்யவும் பாதிக்கப்பட்டவர்களின் வேதனைகளை ஏற்றுக்கொள்ளவும் அர்த்தபுஷ்டியான சீர்திருத்தங்களுக்கு வழிகுக்கவும் முடியும். இலங்கையின் வரலாறு பெருவாரியான ஆணைக்குழுக்கள் நிறைந்ததாக இருக்கிறது. ஒவ்வொரு ஆணைக்குழுவும் திட்டவட்டமான சம்பவங்களையும் அமைதியின்மைக் காலகட்டங்களையும் விசாரணை செய்யும் நோக்குடன் அமைக்கப் பட்டவையாகும். நவாஸ் ஆணைக்குழு இவற்றை மிகவும் கவனமாகவும் நிறைவான முறையிலும் ஆராய்ந்தது.

1994 ஆம் ஆண்டில் மூன்று ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவை 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற மீறல்களை விசாரணை செய்தன. ஆனால், அவை உரிய காலத்துக்கு முன்கூட்டியே நிறுத்தப்பட்டன. முன்னைய விசாரணைகளின் அடிப்படையில் மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுக்க 1998 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு 2002 வெளியிட்ட ஒரு அறிக்கை நீதித்துறையின் நடவடிக்கையை வலியுறுத்தியது. 2001 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இனவன்செயல்கள் (1981 - 1984) தொடர்பான ஜனாதிபதி உண்மை ஆணைக்குழு 1983 கலவரங்களை விசாரணை செய்தது.

பாதிக்கப்பட்டவர்களில் சிலர் 2004 ஆம் ஆண்டில் இழப்பீடுகளை பெற்ற அதேவேளை, வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல் எதுவும் இருக்கவில்லை. திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொலை, பிரெஞ்சு மனிதாபிமான நிறுவனத்தின் 17 பணியாளர்கள் கொலை போன்ற சம்பவங்களை 2006 உடலாகம ஆணைக்குழு விசாரணை செய்த போதிலும், அடுத்த கட்ட நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. 2010 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 2002 - 2009 காலப்பகுதியின் நிகழ்வுகளை விசாரணை செய்து பல விதப்புரைகளைச் செய்தது. ஆனால், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. போரின் இறுதி வருடங்களில் காணாமல் போனவர்கள் மற்றும் குடிமக்கள் உயிரிழப்புகள் குறித்து விசாரணை செய்த 2013 பரணகம ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டில் காணாமல்போனோர் விவகார அலுவலகம் அமைக்கப்படுவதற்கு வழிவகுத்தது.

இந்த ஆணைக்குழுக்களின் மூலமாக திரும்பத் திரும்ப உணரக்கூடியதாக இருந்தது பாதிக்கப்பட்டவர்கள் மத்தியிலும் பரந்தளவில் மக்கள் மத்தியிலும் காணப்பட்ட நம்பிக்கையீனமும் ஏமாற்றமுமேயாகும். அவற்றை

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழரசுக் கட்சியின் இயங்குதளத்தை கொழும்புக்கு நகர்த்தும் இலக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டி?

பனங்காட்டான்

அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு செவ்வி வழங்கப்போன இலங்கையின் மூத்த அரசியல்வாதியும், முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க மூக்குடைபட்டு நின்ற காட்சி, வரப்போகும் உள்ளூராட்சிச் சபைக்கான தேர்தல்களில் போட்டியிட அபேட்சகர்களைத் தேடியலையும் தமிழ் அரசியல் கட்சிகளின் துர்ப்பாக்கிய நிலை ஆகிய இரண்டுமே இப்போது இலங்கை அரசியலில் முக்கியமாகப் பேசப்படுபவை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை கிழட்டு நரி என்பார்கள். இவரது பெறமகனான ரணிலை குள்ளநரி என்று அழைப்பார்கள். அல் ஜசீரா தொலைக்காட்சி செவ்வியின் பின்னர் ரணிலை வாலறுந்த நரியாகவே காண முடிகிறது.

இலங்கையிலுள்ள உள்நாட்டுத் தொலைக்காட்சிகளுக்கும் பத்திரிகைகளுக்கும் ரணில் செவ்வி வழங்கும்போது, இங்குள்ள ஊடகர்கள் மிகப் பவ்வியமாக அடக்கமாக வினாக்களைத் தொடுப்பர். ஊடக அடக்குமுறைகளுக்குள் வாழ்ந்து கொண்டு இவர்களால் வீரியமாக வினாக்களைத் தொடுக்க முடியாது. சிலசமயம் தெரிந்தெடுத்த விடைகளைச் சொல்வதற்காகவே வினாக்கள் தொடுக்கப்படுவதுமுண்டு. இதனால், பதிலளிக்கும் ரணில் பலமான ஒருவராக பிம்பம் காட்டப்படுவார்.

இந்த விளையாட்டு அல் ஜசீராவில் பலிக்கவில்லை. தம்மிடம் இரண்டு மணித்தியாலங்கள் எடுத்த செவ்வியை அல் ஜசீரா தங்களுக்கு ஏற்றாற்போல வெட்டியும் கொத்தியும் ஒரு மணித்தியாலத்துக்குக் குறைத்ததாகவும், தாம் தெரிவித்த பல முக்கிய விடங்கள் ஒளிபரப்பப்படவில்லையென்றும் ரணில் சொல்லும்போது பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது.

எதுவானாலும், போர்க்கால பல உண்மைகளை மறைக்க முடியாத நிலையில் முக்கித்திணறி ஒப்புக்கொண்ட ரணிலை அல் ஜசீரா வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. உனது வயதிலும் பார்க்க எனது அரசியல் அனுபவம் கூடுதலானது என்றும் ரணில் சொல்லிப் பார்த்தார். நான் இடையில் எழுந்து போய்விடுவேனென்றும் வெருட்டிப் பார்த்தார். எதுவுமே இங்கு எடுபடவில்லை.

இந்தச் செவ்வி ஊடாக வெளிவந்த விடயங்களில் முக்கியமான ஒன்று, போர்க்காலத்தில் மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசப்பட்டதென்பதை ரணில் ஒப்புக்கொண்டமை. ஆனாலும் அதனைக்கூட திட்டமிட்ட தாக்குதல்கள் அல்ல என்றே சமாளிக்கப் பார்த்தார். மருத்துவமனைகள் மீது இலக்கு வைத்து ஷெல் தாக்குதல் நடத்தி அழிக்கப்பட்டமையை போர்க்காலத்தில் அங்கு கடமையாற்றிய மருத்துவர்களான சத்தியமூர்த்தி, வரதராஜா போன்றோர் உடனுக்குடன் வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்ததை இலகுவாக மறுக்க முடியாது.

காயப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி தடுக்கப்பட்டதையும் ஒருவாறு ஒப்புக்கொண்ட ரணில் அந்தத் தாக்குதல்கள் குறைந்தளவில்தான் நடைபெற்றதாக கூறினார்.

போர்க்காலக் குற்றவாளியாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கும் இராணுவ ஜெனரல் சவேந்திர சில்வா போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லையென மகா பொய் ஒன்றை ரணில் இங்கு அவிழ்த்து விட்டார். கோதபாயவின் இல்லம் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிட்டபோது நடவடிக்கை எடுக்காமல் விட்டும், அவர் நாட்டைவிட்டு தப்பியோடுவதற்கும் சவேந்திர சில்வாவே காரணமாக இருந்ததால்தான் தாம் ஜனாதிபதியாக முடிந்தது என்ற நன்றி உணர்வுடன் ரணிலால் அவர் குற்றமற்றவர் என்று கூற முடிந்தது என்பது புரிகிறது.

நாய் எங்கு காயப்பட்டாலும் காலைத் தூக்கிக்கொண்டே ஊளையிடுவது போல அல் ஜசீரா செவ்வியின்போது விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் இருந்ததாக ரணில் சொன்னபோது அதனை எவரும் பொருட்படுத்தவில்லை. மொத்தத்தில் இந்தச் செவ்வி காலம் கடந்த பின்னராவது ரணிலை சில விடயங்களை ஒப்புக்கொள்ள வைத்திருக்கிறது. அவர் வாயால் உண்மைகளை வரவழைத்தமைக்காக அல் ஜசீராவுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

> **தமிழரசுக் கட்சியின் இயங்குதளத்தை மெல்ல மெல்ல கொழும்புக்கு மாற்றி அதன் தலைமைப் பதவியை கைப்பற்றும் இலக்குடனேயே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கட்சியை அங்கு களமிறக்கும் முடிவில் சுமந்திரன் தீவிரமாக இருப்பதாக கட்சி மட்டத்தில் கருத்து நிலவுகிறது.**

முதன்முறையாக ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிட்டபோது அத்தேர்தலை வடக்கு கிழக்குவாழ் தமிழர்கள் பகிஷ்கரித்து அவரைத் தோற்கடிக்கச் செய்ததை இப்போதாவது பலரும் சரியென ஏற்றுக்கொள்ளக்கூடும்.

இனி, உள்ளூராட்சிச் சபைத்தேர்தலைப் பார்ப்போம். தெற்கில் வேட்பாளர்கள் தெரிவு மும்முரமாக இடம்பெறுகிறது. மகிந்தவின் பெரமுனவுக்கும், அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்திக்குமிடையில் போட்டி கடுமையாக இருக்குமென செய்திகள் தெரிவிக்கின்றன. முக்கியமாக இளையோரை களமிறக்குவதில் இருதரப்பும் தீவிரமாக உள்ளது. ரணில், சஜித் ஆகியோரின் அணியினர் இன்னமும் இழுபறியில் நிற்கின்றனர். ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் தெரிவுக்கு பொறுப்பாகவுள்ளார். அநுர குமாரவிடம் பரப்புரை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழர் தரப்பு நிலைமை கடந்த பொதுத் தேர்தல்போல அபேட்சகர் தெரிவில் தடுமாறுகிறது. கூட்டும் சரிவரவில்லை, கூட்டணியும் சரிவரவில்லை. ஒன்பது பேர் கூட்டு ஐந்துக்கு இறங்கியுள்ளது. டயஸ்பரா வழங்கும் பணத்தை நம்பி சில அணிகள் தனித்துப் போட்டியிடுகின்றன. தமிழரசுக் கட்சிக்கு தலைவர்கள் பலர் என்பதால் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டிருக்கிறது. பார்க்கப் போனால் பல உள்ளூராட்சிச் சபைகளும் சிதறலாகவே தேர்தலை சந்திக்கும்போல் தெரிகிறது. முடிவுகளும் அவ்வாறே அமையலாம்.

கூட்டமைப்பிலிருந்து பிரிந்து போனவர்களை வருமாறு பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் அழைப்பு விடுத்தார். தமிழரசின் மத்திய குழுவைக் கூட்டி முடிவெடுத்தபின் அறியத் தாருங்கள் என்று பதிலளித்தார் புளொட்டின் தலைவர் சித்தார்த்தன். இதனால் சினமடைந்த சீ.வி.கே. தமது வெறுப்பை வெளிப்படுத்தியதோடு, சித்தார்த்தன் தமிழரசை பூர்வீகமாகக் கொண்டவரென்றும் நினைவுபடுத்தி அதற்கேற்ப முடிவெடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அரசியலில் இது என்ன பூர்வீகம்? புதிதாக இருக்கிறது. காலஞ்சென்ற உடுவில் எம்.பி. வி.தர்மலிங்கத்தின் புதல்வன் என்பதால் சித்தார்த்தன் தந்தை வழியில் தமிழரசுக் கட்சியோடு இணைந்து போட்டியிட வேண்டுமென சீ.வி.கே. எண்ணுகிறார் போலும். அதனால்தான் பூர்வீகம் என்ற பதத்தை இங்கு பயன்படுத்தியிருக்கிறார்.

அரசியலில் பூர்வீகம் என்பது செல்லாக் காசு. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பேரன் (ரவி ஜெயவர்த்தனவின் மகன்) கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசிய கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். சிறீலங்கா சுதந்திர கட்சியின் ஸ்தாபகரான பண்டாரநாயக்கவின் புதல்வர் அனுரா பண்டாரநாயக்க தந்தையின் கட்சியிலிருந்து வெளியேறி ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்து நாடாளுமன்ற சபாநாயகரானவர். அனுராவின் சகோதரியான சந்திரிகா குமாரதுங்கவும் சிறீலங்கா சுதந்திர கட்சிக்கு எதிராக புதுக்கட்சி ஆரம்பித்து தேர்தலில் போட்டியிட்டவர். அரசியல் பூர்வீகம் பற்றிக்கூற இன்னும் பல உதாரணங்கள் உண்டு. இப்போதைக்கு இவ்வளவும் போதும்.

வடக்கில் போட்டியிட அபேட்சகர்களைத் தேடித்திரியும் தமிழரசுக் கட்சி, இம்முறை கொழும்பிலும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது. தமிழரசுக் கட்சியின் இணைப்பொருளாளர் ஒருவரும், கொழும்புக் கிளையின் முக்கியஸ்தர் ஒருவரும் சேர்ந்து சுமந்திரனோடு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் என்ன செய்வதென்று புரியாது அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாராம்.

கொழும்பு உள்ளூராட்சிச் சபையில் போட்டியிடுவதென்றால் குறைந்தது நூறு அபேட்சகர்கள் வேண்டும். அவர்களை எங்கே தேடிப்பிடிக்கப் போகிறார்கள். கொழும்பில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பாலானோர் என்ன காரணத்தாலோ தெரியாது ஐக்கிய தேசிய கட்சிக்கே வாக்களித்து பழக்கப்பட்டவர் கள். மனோ கணேசன் அணியினர் உட்பட குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில தமிழ் பிரமுகர்கள் ஏற்கனவே கொழும்பில் வெற்றி பெற்று வந்துள்ளனர். இவர்கள் எவரும் தமிழ்த் தேசியத்துக்கு எதிராக செயற்பட்டவர்கள் என்று சொல்ல முடியாது. இவ்வாறான நிலையில் தமிழரசுக் கட்சி கொழும்பில் போட்டியிடுவதால் இங்கு வழமையாகப் போட்டியிடும் தமிழர் அணிகளின் வெற்றியைப் பாதிக்கும். அத்துடன் வழமையான தமிழர் பிரதிநிதித்துவம் கொழும்பில் இழக்கப்படும். இதனை தெற்கின் சிங்களக் கட்சிகள் நிச்சயமாக வரவேற்பர்.

இதனைத் தெரிந்து கொண்டும் தமிழரசுக் கட்சி கொழும்பில் போட்டியிடுகிறதென்றால் அதன் பின்னணியில் மறைந்திருக்கும் இலக்கு ஒன்று உண்டு. எதிர்காலத்தில் கட்சியின் இயங்குதளத்தை கொழும்புக்கு மாற்றுவதற்கான திட்டம் இதற்குள் ஒளிந்திருக்கிறது. தமிழரசுக் கட்சியின் முக்கிய முடிவுகள் பல வருடங்களாக கொழும்பின் அல்பிரட் ஹவுஸ் ஹார்டனிலிருந்த தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் இல்லத்திலேயே கூடி எடுக்கப்பட்டு வந்தது. டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன், முன்னாள் அமைச்சர் எம்.திருச்செல்வம் போன்றோர் கொழும்பு வாசிகளாக இருந்ததால் இந்த நடைமுறை வசதியாக இருந்தது. அதேசமயம் யாழ்ப்பாண நகரில் தமிழரசுக் கட்சி அலுவலகம் ஒன்றும் இயங்கி வந்தது.

வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தலில் தோற்றாலும் பரவாயில்லை போட்டியிடுவது என்ற முடிவு, கட்சியின் இயங்குதளத்தை மெதுவாக கொழும்புக்கு மாற்றுவதற்கானது. அதனூடாக கட்சியின் தலைமைப் பதவியை கொழும்பு வாசி யான சுமந்திரன் கைப்பற்றிக்கொள்வது என்பது ஓரளவுக்கு கட்சியின் முக்கியமானவர்களுக்கு தெரியவந்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடத்தை மாற்றினால் கொழும்பு அரசியலுக்கேற்றதாக எக்கராஜ்ய அரசியல் கொள்கையை மையப்படுத்தி தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைகளை மழுங்கடித்து விடுவது இலகுவாகி விடும். இதற்கு தமிழரசின் மத்திய குழு சம்மதித்துள்ளதா? பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் இவ்விடயத்தில் நிதானமாக முடிவெடுக்க வேண்டுமென கட்சியிலுள்ள பலரும் எதிர்பார்க்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளனாகும் ஆர்வத்தால் மேற்படிப்பைத் துறந்த பாரதி

1984ம் ஆண்டின் நடுப்பகுதி...திகதி நினைவில்லை.. யாழ்ப்பாணத்திலிருந்து அப்போதுதான் வெளிவரத் தொடங்கியிருந்த 'ஈழமுரசு" பத்திரிகையின் அலுவலகத்துக்கு ஒரு பத்திரிகையாளராகிவிட வேண்டுமென்ற நீண்டகாலக் கனவுடன் சென்று கொண்டிருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது தினசரியாக கால் பதித்த ஈழமுரசு அப்போது வார இதழாக வெளிவந்து கொண்டிருந்தது. அதனை தினசரிப் பத்திரிகையாக்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்ற வேளையில் அதற்காக பத்திரிகையாளர் தேவை என விளம்பரப்படுத்தியிருந்தார்கள். நானும் விண்ணப்பித்தேன். அதற்குக் கிடைத்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதத்துடன்தான் நான் அங்கு சென்று கொண்டிருக்கிறேன்.

ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரியராக திரு எஸ்.திருச்செல்வம் அவர்கள் பொறுப்பேற்றிருப்பதாக அறிந்திருந்தேன். அவரை நேரில் அறிந்திருக்காத போதிலும், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மத்தியில் அவரது பெயர் மிகவும் பிரபலமாக இருந்தது. கொழும்பிலிருந்து வெளிவரும் தினகரன் பத்திரிகையில் பணியாற்றிய அவர் யாழ்ப்பாணத்தில் நன்கு அறியப்பட்டிருந்தார். என்னுடைய வாழ்க்கைப் பாதையை நிர்ணயிக்கும் ஒருவராக அவர் இருப்பார் என்பதை நான் அப்போது நினைத்திருக்கவில்லை.

அலுவலகத்தில் அவரைச் சந்தித்தபோது மிகவும் எளிமையாக இருந்தார். வழமையான கேள்விகளைக் கேட்டார். அரசியல், இலக்கியம் என அனைத்து விடயங்களையும் பேசினார். பத்திரிகை ஆசிரியர் ஒருவரை நான் சந்தித்துப் பேசுவது அதுதான் முதல் தடவை. அதனால், ஒரு பிரமிப்புடனேயே அவரைப் பார்த்தேன்.

ஈழமுரசுக்கு செய்திகள், கட்டுரைகளை எழுதுமாறு கேட்டுக்கொண்டார். விரைவில் தினசரியாக வெளிவரும் எனவும், அப்போது முழுநேர பத்திரிகையாளராக இணைந்துகொள்ள முடியுமா எனவும் கேட்டார். மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். அதுதானே என்னுடைய கனவு!

அதுதான் 'திரு" என எல்லோராலும் அழைக்கப்படும் பத்திரிகைத்துறையில் எனக்கு குருவாகிய ஊடகத்துறை ஜாம்பவான் திருச்செல்வத்துடனான எனது முதலாவது சந்திப்பு!


அந்தச் சந்திப்பிலேயே அவரது ஆளுமை என்னைக் கவர்ந்தது. அனைவரிடமும் இனிமையாகப் பேசும் அவரது சுபாவம். அனைத்து விடயங்களையும் அறிந்து வைத்திருப்பதில் அவருக்கிருந்த திறமை. ஒருவருடன் உரையாடிக் கொண்டிருக்கும்போதே அவர்களிடமிருந்து செய்திகளைக் கறந்துவிடும் அவரது ஊடகத்துறை உத்தி, மற்றர்களுக்கு உதவுவதில் அவர் கொண்டிருந்த ஆர்வம்....

இவை அனைத்தும் அவருடன் இணைந்து பயணிப்பதில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது.

சில மாதங்களுக்குள் தினசரியாக்குவோம். அதுவரையில் ஒரு சுயாதீனப் பத்திரிகையாளராகச் செயற்படுமாறும் கேட்டுக்கொண்டார்.


அடுத்த வாரமே வாரம் இரு இதழாகி, 1984 செப்டம்பர் 10ம் திகதி ஈழமுரசு தினசரியாகியபோது நானும் ஒரு முழுநேரப் பத்திரிகையாளரானேன். யாழ். தொழில்நுட்பக் கல்லுரியில் படித்துக் கொண்டிருந்த நான் பத்திரிகையாளராக வேண்டும் என்பதற்காக அதனையும் கைவிட்டேன். திரு. திருச்செல்வம் அவர்களுடனான எனது பயணம் ஆரம்பமாகியது.

வெளிவந்து கொண்டிருக்கும் ஒரு பத்திரிகையில் ஆசிரியராக இணைவது என்பது கடினமான ஒன்றல்ல.



கனடாவில் 2019ல் இடம்பெற்ற விழாவில் பாரதி உரையாற்றுகிறார்.

**1984ம் ஆண்டு உலகப் பரப்பில் கால் வைத்த பாரதி இராஜநாயகம் தமது ஆரம்பப் பயணம் பற்றி எழுதிய ஒரு கட்டுரையின் முன்பகுதி, அவரது மறைவின் 31ம் நாளான இன்று பிரசுரமாகிறது. 2019ம் ஆண்டு கனடாவில் வெளியான 'ஊடகத்திரு' நூலில் இக்கட்டுரை முழுமையாக இடம்பெற்றுள்ளது.**



கனடா விழாவில் எழுத்தாளர் அ.முத்துலிங்கத்துடன் பாரதி

புதிதாக ஒரு பத்திரிகையை ஆரம்பிப்பது என்பது மிகவும் கடினமான பணி. 'திரு" அவர்கள் அந்த கடினமான பணியைச் செய்தார். ஈழமுரசு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அவருடன் இணைந்து பயணித்தவன் என்ற முறையில் அவரது கடின உழைப்பும், பத்திரிகைத்துறையில் அவருக்கிருந்த திறமையும், அனுபவமும்தான் சில மாதங்களிலேயே ஈழமுரசை முன்னணிக்குக் கொண்டுவந்தது என்று நிச்சயமாகச் சொல்வேன்.

யாழ்ப்பாணத்தின் முதலாவது தினசரி ஈழநாடு 1960ல் தினசரியாக வெளிவரத் தொடங்கியிருந்தது. ஈழநாட்டை பிரபலப்படுத்துவதில் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் பெரும் பங்காற்றியது. அதற்கு அடுத்ததாக கோகிலாம்பாள் கொலை வழக்கும் ஈழநாடு யாழ்ப்பாணத்தில் மக்கள் மயமாக காரணமாக இருந்தது.

1984ல் ஈழமுரசு ஆரம்பிக்கப்பட்டபோது, ஆயுதப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கியிருந்தது. யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த அதேவேளையில், விடுதலைப் போராட்ட அமைப்புகளின் தாக்குதல்களும் தீவிரமடைந்திருந்தன. திடீர் சுற்றிவளைப்புகள், திடீர்க் கைதுகள், போக்குவரத்துத் தடைகள், அவசரமாக முன்னறிவித்தலின்றிப் பிறப்பிக்கப்படும் ஊரடங்குச் சட்டம் என்பவற்றால் யாழ்ப்பாணம் கதிகலங்கிக் கொண்டிருந்தது. வசதியானவர்கள் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியே அனுப்பி விடுவதற்கு முயன்று கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து தமிழர்களின் குரலாக அதனைக்கொண்டுவருவது என்பது கத்தி முனையில் நடப்பதைப் போன்றது. அதனைச் செய்வதற்கு அசாதாரண திறமை மட்டுமன்றி துணிச்சலும் தேவை. அது 'திரு" அவர்களிடம் இருந்தது.

இதற்கு மேலாக, இந்த ஆபத்தான காலகட்டத்தில் தன்னைப் பாதுகாப்பதற்கு மேலாக தன்னுடன் பணியாற்றும் இளம் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பையும் அவர் ஏற்றிருந்தார். இதற்கு என்னிடமே ஒரு சிறந்த உதாரணம் உள்ளது.

1985 பெப்ரவரி 4ம் திகதி சுதந்திர தினம். குறித்த செய்தி சேகரிப்பதற்காகச் சென்றபோது யாழ். கச்சேரிப் பகுதியில் வைத்து நான் கைது செய்யப்பட்டேன். இராணுவம் என்னை குருநகர் இராணுவ முகாமில் கொண்டு சென்று அடைத்தது. குருநகர் தொடர்மாடி வீடு அப்போது இராணுவ சித்திரவதைக் கூடமாக இருந்தது. அதற்குள் செல்பவர்கள் உயிருடன் திரும்புவது அதிசயம். வெளியே தொடர்பு கொள்ளவும் முடியாது.

அங்குதான் நான் அடைக்கப்பட்டேன். காலை முதல் இரவுவரை கடுமையான விசாரணைகள். இரவு திடீரென விசாரணைகள் நிறுத்தப்பட்டன. இரவுச் சாப்பாடு தந்தார்கள். நான் மறுத்துவிட்டேன். சில நிமிடத்தில் முழுமையாக அடைக்கப்பட்ட ஜீப் ஒன்றில் ஏற்றினார்கள். முன்னும் பின்னும் பாதுகாப்புக்கு ஜீப் வாகனங்கள் வர அந்த நள்ளிரவில் வாகனம் புறப்பட்டது. எங்கே செல்கின்றது எனத் தெரியாமல், அச்சத்துடன் நான் நடுங்கிக்கொண்டிருந்தேன்.

சில நிமிடத்தில் எமது அலுவலகத்தின் முன்பாக வாகனம் நின்றது. என்னை இறக்கி உள்ளே கொண்டு சென்றார்கள். ஆசிரியர் 'திரு" வழமையான புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தார். என்னை அவரிடம் கையளித்துவிட்டு இராணுவத்தினர் புறப்பட்டனர். அப்போதுதான் எனக்கு உயிர் வந்தது.

நான் 'காணாமல் போய்விட்ட "செய்தியை அறிந்தவுடன், தேடியபோதுதான், கச்சேரிப் பகுதியில் இராணுவம் என்னை கைது செய்த செய்தி, திரு அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. உடனடியாகவே செயலில் இறங்கி குருநகர் முகாமில் நான் இருப்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றார். உடனடியாக என்னை விடவேண்டும் என இராணுவத்துக்குக் கொடுத்த அழுத்தத்தினால்தான் அந்த நள்ளிரவு வேளையில் விடுதலை கிடைத்தது. அப்போது இரவு வேளைகளில் யாழ்ப்பாணத்தில் இராணுவம் வெளியே வருவதில்லை. தாக்குதல் அச்சம் அதற்குக் காரணம். ஆனால், ஆசிரியர் கொடுத்த அழுத்தத்தால் இராணுவத்துக்கு வேறு வழியிருக்கவில்லை.


இது ஒரு உதாரணம். இதுபோன்ற பல சம்பவங்கள் இருக்கின்றன. ●

# நிலாவில் நீலப்பிசாசு

குரு அரவிந்தன்

சந்திரனில் 'நீலப்பிசாசு' என்று சமீபத்தில் ஊடகங்களில் வெளிவந்த செய்தியை வாசித்த போது, பலரும் பதட்டப்பட்டார்கள். மனிதர்களைச் சந்திரனில் குடியேற்ற அமெரிக்கா முயற்சி செய்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அங்கு பிசாசு குடிகொண்டிருக்கிறதா என்ற பயமும் ஒருபக்கம் எழுந்தது. இது உண்மையா, சந்திரனில் பிசாசு இருக்கிறதா? என்றெல்லாம் கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். மேலை நாட்டவருக்கும் இந்தப் பேய், பிசாசுகளில் நம்பிக்கை இருப்பதால்தான், கலோவீன் தினத்தைப் பிரமாண்டமாக இங்கே கொண்டாடுகின்றார்கள். சின்னப் பிசாசா அல்லது பெரிய பிசாசா? எப்படி இந்த நீலப்பிசாசு சந்திரனுக்கு வந்தது?

அறிவியல் சார்ந்த செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளா விட்டால், இது போன்ற சந்தேகங்கள் வரத்தான் செய்யும். நிலா என்று சொல்லப்படுகின்ற சந்திரனில் 'ப்ளூா கோஸ்ட்' என்று சொல்லப்படுகின்ற நீலப்பிசாசு இருப்பது உண்மைதான். உங்களுக்கும் இது ஆச்சரியமாக இருக்கும், ஆனால் எங்கள் பூமியில் இருந்துதான் அந்த நீலப்பிசாசு அங்கு சென்றதற்கான சான்றுகள் இருக்கின்றன. ஆமாம், சந்திரனில் மனிதன் ஏற்கனவே தரை இறங்கி இருந்தாலும்,




தரை இறங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சென்ற ஜனவரி மாதம் 15 ஆம் திகதி 2025 அன்று நிலாவை நோக்கித் தரைஇறங்கியான இந்த 'ப்ளூா கோஸ்ட்' என்று சொல்லப்படுகின்ற நீலப்பிசாசு அமெரிக்காவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டது. அது மார்ச் மாதம் 2 ஆம் திகதி வெற்றிகரமாகச் சந்திரனில் தரை இறங்கி இருந்தது.

நிலாவில் தரை இறங்குவது என்பது எவ்வளவு கடினமானது என்பது அனேகருக்குத் தெரியாமல் இருக்கலாம், காரணம் அங்கு ஈர்ப்பு விசை குறைவாக இருப்பதாலும், தரை இறங்குவதற்குத் தேவையான சரியான இடத்தைத் தேர்ந்தெடுப்பதும் மிகக் கடினமானதாகும். சந்திரத்தரை சிறிய குன்றுகளையும், குழிகளையும் கொண்டதாக இருப்பதால், பூமியில் இருந்து சரியான இடத்தைத் தெரிவு செய்வது கடினமாகும். இதுவரை சுமார் 143 விண்கலங்கள் பூமியில் இருந்து சந்திரனுக்கு அனுப்பப்பட்டாலும், அவற்றில் 27 விண்கலங்கள் மட்டும் தான் வெற்றிகரமாகச் சந்திரனில் தரை இறங்கியிருக்கின்றன. பாதுகாப்பாக நிலாவில் தரை இறங்கிய ரோபோக்களில் இந்த நீலப்பிசாசும் ஒன்றாகும். மத்திய அமெரிக்காவில் உள்ள ஒரு வகை மின்மினிப் பூச்சிகளுக்கும் 'ப்ளூா கோஸ்ட்' என்ற பெயர் இருப்பதால், அந்தப் பெயரைத் தான் இந்தத் தரை இறங்கிக்குச் சூட்டியிருந்தார்கள்.

இதுவரை வெற்றிகரமாகச் சந்திரனில் ரோபோட்டிக் விண்கலங்களைத் தரை இறக்கிய நாடுகளில் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, சீனா, இந்தியா, யப்பான் ஆகிய ஐந்து நாடுகள் இந்த சாதனையைப் படைத்திருக்கின்றன. அமெரிக்கா மட்டும்தான் மனிதர்களைச் சந்திரனில் இதுவரை வெற்றிகரமாகத் தரை இறக்கியிருக்கின்றது. சந்திரனுக்கான இந்தத் திட்டம் வெற்றி அடைந்தால், அடுத்து மனிதர்களை அங்கு தரை இறக்கி, விண்வெளி நிலையத்தில் குடியிருப்பது போல, சந்திரக் குடியிருப்புக்குத் தயாராகுகின்றார்கள். இதைத் தொடர்ந்து செவ்வாய் கிரகம் நோக்கிய பயணம் வெகு விரைவில் ஆரம்பமாகலாம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பள்ளி செல்லும் வயதில் 'தாயாகும்' சிறுமிகள்: காரணங்களும் தீர்வுகளும் என்ன?



இலங்கையில் பாடசாலை செல்லும் வயதிலுள்ள சிறுமிகள் மத்தியில் பதிவாகியுள்ள குழந்தை கர்ப்பிணிகளில், 10 வயதான சிறுமி ஒருவரும் அடங்குவதாக அதிகாரபூர்வ தகவல்களின் ஊடாக உறுதி செய்யபட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு 163 பாடசாலை மாணவிகள் கர்ப்பம் அடைந்துள்ளதுடன், 2024ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கையானது 213 வரை அதிகரித்துள்ளதாக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக விசாரணை பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, 2024ஆம் ஆண்டு பதிவான குழந்தைத் தாய்மார்களுக்கு மத்தியில், 10 வயதான சிறுமி ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக பிரிவின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும், அதிகாரப்பூர்வமாக பதிவாகியுள்ள குழுந்தைத் தாய்மார்களை விடவும், அதிக எண்ணிக்கையிலான குழந்தைத் தாய்மார்கள் இலங்கையில் இருக்கக்கூடும் என பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக பிரிவிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் தேதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம், 18 வயதுக்கு குறைவான அனைவரும் சிறுவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தண்டனைச் சட்டகோவையின் 363 (இ) சரத்தின் பிரகாரம், 16 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவரின் "ஒப்புதல்" பொருந்தாது என்பதால், அவ்வாறானவர்களுடன் உடலுறவு கொள்வதானது "பாலியல் வன்கொடுமை" எனக் கருதப்படுகின்றது.

தற்போது பதிவாகின்ற குழந்தைகள் கர்ப்பமடைவதானது, காதல் தொடர்புகளின் பெறுபேறுகளினால் ஏற்படுகின்ற சம்பவம் என பிரதி பொலிஸ் மாஅதிபர் குறிப்பிடுகின்றார்.

"இதில், 16 வயதுக்குக் குறைவான சிறுமிகளின் விருப்பத்துடன் இடம்பெறுகின்ற சம்பவங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையே எமக்குள்ள பிரச்னையாகும். அது துஷ்பிரயோகம் என சட்ட ரீதியாக உரித்தானாலும், அது பலவந்தமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல. காதல் ஏற்பட்டு விருப்பத்துடன் இடம்பெற்ற சம்பவங்களாலேயே அந்தச் சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளனர்."

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பலவந்தமாக இடம்பெற்ற துஷ்பிரயோகங்களில் கர்ப்பமடைவதைத் தடுப்பதற்கு வாய்ப்பில்லை. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கும் போது, அந்தச் சிறுமி கர்ப்பமடைந்து பல மாதங்கள் ஆகியிருக்கும் எனவும் அவர் கூறுகின்றார்.

**பாலியல் தொடர்பான போதிய தெளிவின்மையே குழந்தைகள் இவ்வாறான பேராபத்திற்கு முகம் கொடுக்கக் காரணம் என பிரதி பொலிஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர கூறுகின்றார்.**

"பலவந்தமாக இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கட்டாயம் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கும். அதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். கர்ப்பமடைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும்.

சம்பவம் இடம்பெற்று முதல் 24 அல்லது 48 மணித்தியாலங்களுக்குள் வருகை தரும் பட்சத்தில், நீதிமன்றம், மருத்துவர்கள் அது தொடர்பான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். ஆனால், அவர்களுடன் சம்பந்தப்பட்ட சிறுமிகள் தொடர்புகளைப் பேணுகின்றமையினால் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனால், அவர்கள் அவற்றை மறைத்து காலம் செல்லும் போதே அறிந்துகொள்ள முடிகின்றது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள சட்டத்தின் பிரகாரம், குழந்தைகள் கர்ப்பமடைந்தால், தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் தவிர்த்து, கர்ப்பத்தைக் கலைப்பதற்கு சட்டத்தின் இயலுமை இல்லை.

நாட்டில் தற்போது பதிவாகின்ற சில சம்பவங்களில், கர்ப்பத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டிய ஆண்கள், 18 வயதுக்கு குறைவான சிறுவர்கள் எனவும் பிரதி பொலிஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவிக்கின்றார்.

அண்மைக் கால தரவுகளின் அடிப்படையில், இவ்வாறான சம்பவங்களில் 14 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட பெண் குழந்தைகள் உட்படுத்தப்படுகின்றமை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

குழந்தைத் தாய்மார்களின் குழந்தைகள் "பாதிக்கப்பட்டவர்களாகவே" இந்த உலகத்தைக் காண்பதாகக் கூறும் பிரதி பொலிஸ் மாஅதிபர், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சமூகத்தின் கவனம் திரும்ப வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

"யாரும் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதை நான் காணவில்லை. இவர்களை நீதிமன்றம் வேறு யாருக்காவது ஒப்படைத்து விடும். பெரும்பாலும் அவர்களின் குடும்பத்திடமே ஒப்படைக்கப்படும். விருப்பம் என்றால் வளர்த்துக்கொள்ள முடியும்."

பாலியல் தொடர்பான போதிய தெளிவின்மையே குழந்தைகள் இவ்வாறான பேராபத்திற்கு முகம் கொடுக்கக் காரணம் என பிரதி பொலிஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர கூறுகின்றார்.

"பாலியல் தொடர்பான கல்வி, அது தொடர்பில் காணப்படும் அறிவு மற்றும் தேவையற்ற விதத்தில் கர்ப்பமடைவதைப் பாதுகாத்துக் கொள்வது ஆகியவை குறித்த தெளிவின்மை இதற்கு ஒரு காரணம். பாலியல் உறவைப் பேணும் ஒருவராயின், அவர் கட்டாயமாக கருத்தடை சாதனங்கள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு வயது எல்லை எதுவும் கிடையாது"

"நாங்கள் இந்தச் சம்பங்கள் குறித்துப் பார்க்கும்போது அந்தச் சிறுமிகள் அது தொடர்பில் அறிந்திருப்பதில்லை என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது" என்பதை விசாரணை அனுபவங்களின் ஊடாக அவர் குறிப்பிட்டார்.

"நாங்கள் இந்தப் பிரச்னைகள் குறித்து ஆராயும்போது, குடும்பங்களில் காணப் படும் பிரச்னைகள் குறித்து அதிகளவில் அவதானிக்கின்றோம். பெரும்பாலான சிறார்கள் பாதுகாப்பற்ற முறையில் இருக்கின்றார்கள். தாயும், தந்தையும் பிரிந்துள்ளமை அதற்கான காரணம். இவ்வாறான நிலையிலேயே காதலுக்கு மிகவும் விரைவாக அடிமையாகின்றனர்."

எவ்வாறாயினும், சரியாக இந்த நிலைமைக்கான காரணம் தொடர்பில் கூற முடியாது என பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக விசாரணைப் பிரிவின் பிரதானி பிரதி பொலிஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர குறிப்பிடுகின்றார்.

குழந்தைகளுக்கு பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடைமுறை இல்லாமையால், பாலியல் தொடர்பில் முறைசாரா விதத்தில் அவர்கள் அறி வைப் பெற்றுக் கொண்டுள்ளதாக மாத் தளை மாவட்ட தாய் மற்றும் குழந்தை சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் நுவன் தோடவத்த, தெரிவித்துள்ளார்.

"பாடசாலை கல்வியில் முறையான விதத்தில் இவற்றைக் கற்பிப்பதில்லை. அதனால், முறைசாரா விதத்தில் அவர்கள் இது தொடர்பான அறிவைப் பெற்றுக்கொண்டுள்ளனர். பெரியோரிடம், நண்பர்களிடம், பாலியல் திரைப் படங்களைப் பார்த்து இவ்வாறான அறிவைப் பெற்றுக்கொண்டுள்ளனர். தெளிவின்மை காரணமாகவே குழந்தைகள் கர்ப்பமடைகின்றனர். அவ்வாறானவர்களை நாங்கள் சந்திக்கின்றோம்."

"இலங்கையில் 12 முதல் 14 வயது குழந்தைகளுக்குக்கூட இது தொடர்பில் தெரியாது. துஷ்பிரயோகம் செய்பவர்கள் பெரியவர்களாக இல்லாத போதிலும்கூட, அவர்கள் அது குறித்து அறிந்திருக்கமாட்டார்கள்" என அவர் கூறுகின்றார்.

குழந்தைகள் ஆபத்தில் விழும் சந்தர்ப்பங்கள் தொடர்பான தெளிவு வழங்கப்படுவதில்லை எனக் கூறும் மருத்துவ அதிகாரி தோடவத்த, எதிர்காலத்தைத் திட்டமிடும் வகையிலான கல்வி இல்லாமையானது, பாரிய பிரச்னை எனத் தெரிவிக்கின்றார்.

"துஷ்பிரயோகத்தை ஒருபுறத்தில் வைப்போம். எமது இளைய சமூகத்தில் குறிப்பிடத்தக்க அளவிலான குழந்தைகள் 18 வயதில் திருமணம் செய்து கொண்டு, 19 வயதில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். அவர்கள் தங்களுக்கென ஒரு குடும்பம் என்ற கற்பனை உலகத்திற்குள் விரைவாகப் பிரவேசிக்க முயல்கின்றனர்."

"இந்தக் குழந்தைகள் ஆபத்தில் விழக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பில் தெளிவு வழங்கப்படுவதில்லை. உதாரணமாக சமூக ஊடகப் பயன்பாட்டைக் கூற முடிகின்றது. அவ்வாறான இடத்தில் அதிக ஆபத்து எந்த இடத்தில் இருக்கின்றது. அதை புத்திசாதுரியமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பவை எந்தவோர் இடத்திலும் கல்வி முறையில் கற்பிக்கப் படவில்லை" என அவர் குறிப்பிடுகின்றார்.



குழந்தைகளுக்கு பாலியல் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொடுக்கும் வயது தொடர்பில் டாக்டர் நுவன் தோடவத்தவிடம் வினவப்பட்டது.

"சிறு வயது முதலே, தமது உடலிலுள்ள உறுப்புகள் குறித்த தெளிவு கிடைக்கும் சந்தர்ப்பத்திலேயே, சிறிது சிறிதாக இந்த அறிவை வழங்க ஆரம்பிக்க வேண்டும். மூன்று வயது குழந்தைக்கு மாதவிடாய் சுழற்சி புரிவதில்லை. எனினும், வயிற்றைப் பிடிப்பது, முகத்தைப் பிடிப்பது, மார்பைப் பிடிப்பது புரியும்."

குழந்தைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக இது தொடர்பான கல்வியை ஆரம்பிக்க வேண்டும் என அவர் குறிப்பிடுகின்றார். குறிப்பிட்ட வேலைத் திட்டத்தின் ஊடாக கல்வி முறையில் இவ்வாறான சம்பவங்களைக் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ. சிவகணேஸ், மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** 'வன்னி இறுதிப் போரில் சிக்குண்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டன. மருத்துவமனைகள்மீது விமான குண்டுவீச்சுகள் நடத்தப்பட்டன. ஆனால், இவை திட்டமிட்ட முறையில் - பெருமளவில் நடக்க வில்லை" - என்று முன்னாள் ஜனாதிபதியும் போர்க் காலத்தில் எதிர்க்கட்சி தலைவராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரே. அவர் என்ன சொல்லவருகிறார் என்பது எனக்கென்றால் புரியவில்லையே. உங்களுக்காவது ஏதாவது புரிந்ததா?

**வியுக்தியார்:** இதில் என்ன புரிந்துகொள்வதற்கு இருக்கின்றது. போரில் குற்றம் நிகழ்ந்ததுதான், ஆனால் அது குற்றமில்லை என்கிறார். மனிதாபிமான உதவிகளை அனுப்பமுடியவில்லை என்று அவர் கூறவில்லையே. மனிதாபிமான உதவிகள் தடுக்கப்பட்டன என்றாலே, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதுமாதிரித்தானே. அதேபோலத்தான், ஆயுததாரிகள் மீது வீசிய குண்டுகள் மருத்துவமனைகள் மீது தவறுதலாக விழுந்துவிட்டன என்று அவர் கூறவில்லை. மருத்துவமனைகள் என்று தெரிந்துகொண்டே குண்டுகள் விசப்பட்டன என்கிறார். பின்னர் எதற்கு திட்டமிட்ட முறையில் நடக்கவில்லை- பெருமளவில் நடக்கவில்லை என்கிறார் என்பது நாம் புரிந்துகொள்ளக்கூடியதுதானே. அதாவது அந்த குற்றங்களைச் செய்தவர்களை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தனக்கு இருக்கின்றதல்லவா என்கிறார் என்று நினைக்கின்றேன். நம்மவர்கள் கேட்கின்ற சர்வதேச விசாரணை நடந்தால் முதலில் சாட்சிக்கு அழைக்கப்படவேண்டியவர் இவர்தான் என்று நினைக்கின்றேன்.

---

**இரா. இராஜேஸ்கரன், ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** தையிட்டி விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்குமாயின் அதற்காக அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளாரே. இதுபோன்ற சர்ச்சைக்குரிய விடயங்களை பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவதன் மூலம் தீர்வுகண்டுவிடமுடியும் என்று நம்புகின்றீர்களா?.

**வியுக்தியார்:** இதுபோன்ற விடங்களை பாராளுமன்றத்தில் பேசாவிட்டால் பின்னர் எதற்குத்தான் அவர்கள் அங்கு செல்வது?. அந்த விகாரை தனியார் காணியில் அமைக்கப்பட்டது என்கின்றபோதே அது சட்டவிரோதமானதுதான். ஆனால் விகாரை காணி அருகில் இருப்பதாகவும், யுத்தம் நடைபெற்றகாலத்தில் அந்தப்பகுதிகள் முழுவதுமே எல்லைகள் இல்லாமல் அடையாளம் தெரியாமல் போனதால்தான் காணி மாறி கட்டப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. ஆக ஒரு விடயத்தை நாம் கவனிக்க வேண்டும் தையிட்டியில் ஒரு விகாரை இருந்திருக்கின்றது. அங்கே இருந்த விகாரை யுத்தம் காரணமாக எல்லாவற்றையும் போல 'காணாமல் போக", புதிய விகாரையை கட்டியிருக்கிறார்கள். விகாரை கட்டியது சட்டவிரோதமானது என்றாலும் அது கட்டி முடிக்கப்பட்டு விட்டபின்னர் அதனை இடிக்கவேண்டும் என்று கோருவது அரசியல்ரீதியாக சரியானதாக இருந்தாலும், அதிலுள்ள பல்வேறு விடயங்களையும் யோசிக்கவேண்டும். யாழ்ப்பாணம் பண்ணையில் யாரோ சிலர் இரவோடு இரவாக ஒரு நாகபூசணி அம்மன் சிலையை வைத்துவிட்டார்கள். அதனை அகற்றுவதற்கு பொலிசார் முயன்றபோது விடயம் நீதிமன்றம் வரை சென்று நீதிமன்ற உத்தரவுப்படி அதனை அகற்றுவது நிறுத்தப்பட்டு, அந்தச் சிலை இன்றுவரை பண்ணையில் வைக்கப்பட்டிருக்கின்றது. திடீரென்று வைக்கப்பட்ட ஒரு சிலையையே அகற்ற முடியாதபோது, கட்டி முடிக்கப்பட்ட விகாரையை, அதுகும் இலங்கையில் உயரமான விகாரைகள் சிலவற்றில் ஒன்றாக கருதப்படும் அந்த விகாரையை அகற்ற வேண்டும் என்று கேட்டபது சரியானதா என்பது தெரியவில்லை. ஆனால் அதற்காக நீங்கள் கேட்பது போல இந்தப் பிரச்சினையை கதைத்துக்கொண்டி ருந்தால் தானே இதுபோல இன்னுமொரு விகாரையை யாவது சட்டவிரோதமாக கட்டமாட்டார்கள். அதனால் இது பற்றி கதைத்துக்கொண்டிருப்பது தவறில்லைத்தானே.

---

**செல்வா கேசவன் சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** வடக்கில் உள்ள போதைப்பொருள் பாவனைக்கு முழுபொறுப்பும் இராணுவத்தினரையே சாரும் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் பிரச்னை ஏற்பட்டால் இராணுவ முகாம்களில் சென்று ஒழிவதாகவும் குற்றஞ்சுமத்தியிருக்கிறாரே?.

**வியுக்தியார்:** அவருடைய அரசியல் கொள்கைமீது எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், அவர் மீது மிகுந்த மரியாதை இருக்கிறது. பாராளுமன்றத்தில் அவர் பேசுகின்றபோது, ஒரு தமிழனாய் எமக்கு பெருமை ஏற்படுகின்ற அளவிற்கு அவரது பேச்சுக்கள் இருக்கும். ஆனால் அண்மைக்காலமாக என்ன நடந்தது என்று தெரியவில்லை. சிங்கள அரசியல்வாதிகளில் மேவின்




# வியுக்தியார் பதில்கள்

சில்வா 'லெவலுக்கு' இறங்கிவந்து இப்போது அவர் பேசுகிறார். வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி.விக்கினேஸ்வரன் பதவியேற்ற சில வாரங்களில், வடக்கில் வீதிகள் 'காப்பற்' வீதிகளாக மாற்றப்பட்டது இராணுவத்தினரின் வாகனங்கள் ஓடித்திரிவதற்காகத்தான் என்று சொன்னதுதான், கஜேந்திரகுமாரின் இந்த செய்தியைப் பார்த்தபோது ஞாபகத்திற்கு வந்தது. அவர் ஒரு சட்டத்தரணி மாத்திரமல்ல, பிரிட்டனில் 'பரிஸ்டர்' பட்டம் பெற்ற சட்டமேதை. இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றபோது அரசியல்வாதிபோல அல்லாமல் ஒரு சட்டவாதிபோல ஆதாரங்களுடன் முன்வைக்கவேண்டிய ஒருவர். போதைப்பொருள் வர்தத்கத்தில் ஈடுபட்ட ஒருவர் பிரச்சினை ஏற்பட்டால் இராணுவ முகாம்களில் சென்று ஒழிகின்றதாக குறிப்பிடும் அவர், நிச்சயம் அப்படி ஒழிந்தவர் பற்றியும் அறிந்திருப்பார் என்று நினைக்கின்றேன். அப்படி யார் எப்போது என்ற விடயங்களையும் பகிரங்கப்படுத்தினால் தானே, குற்றவாளிகளையும் அவர்களுக்கு உதவும் ராணுவத்தினரையும் சட்டத்தின் முன்நிறுத்த முடியும். நான் இப்படி எழுதுவதற்காக அப்படி நடக்கவில்லை என்றோ, அல்லது நடக்காது என்றோ எழுதுவதாக எண்ணிவிடாதீர்கள். அவர் தனக்கு தெரிந்த விபரங்களை முழுமையாக வெளியிடவேண்டும் என்பதே எமது விருப்பம்.

---

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** வடக்கு, கிழக்கின் கடலோர மக்களின் வாழ்வாதார நடவடிக்கையை சுரண்டும் விதத்தில் செயல்படும் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப் படுத்த நடவடிக்கை

எடுக்கவேண்டும் - என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ள அதேவேளையில், வடக்கு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற

நோக்கம் இந்தியாவுக்கு இருந்தால் தனது நாட்டு மீனவர்களின் சட்டவிரோத செயல்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அமைச்சர் பிமல் ரத்னாயக்க கோரிக்கை விடுத்திருக்கிறாரே. இந்தப் பிரச்சினை பற்றி எல்லோரும் பேசிவருகின்றபோதிலும் இதற்கு தீர்வுகாணப்படாமல் இருப்பது எதனால் என்று புரியவில்லையே?

**வியுக்தியார்:** அரசியல்வாதிகளுக்கு எந்தப்பிரச்சினையும் தீர்வுகாணப்படாமல் தொடர்வதுதானே விருப்பமானது. அப்போதுதான் அவர்களும் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கலாம். நமது இனப்பிரச்சினை பற்றி அறுபது வருங்களாக பேசிக்கொண்டிருப்பது போல. இந்த இழுவைப் படகுகள், சாதாரண மீனவர்களுக்கு சொந்தமானவை அல்ல. இவை பெரும் முதலாளிகளிற்கு சொந்தமானவை. தமிழ் நாட்டில் மிகவும் செல்வாக்குப்பெற்ற அரசியல்வாதிகள் சிலருக்குக் கூட நூற்றுக்கணக்கான படகுகள் சொந்தமாக இருக்கின்றன. இங்கே மீன்பிடியில் ஈடுபடுகின்றபோது கைதுசெய்யப்படுபவர்கள் அப்பாவி மீன்பிடி தொழிலாளர்கள். அதாவது தினக்கூலிகள் தான். அப்படி சிறையில் இருக்கின்றபோதும் அவர்களுக்கு அந்த முதலாளிமார் சம்பளம் கொடுகின்றார்களா என்பது தெரியவில்லை. ஆனால் அவர்கள் பாவம் அப்பாவிகள். இந்த படகு சொந்தக்காரர்கள் கிடைக்கின்றபோது அள்ளிவிடவேண்டும் என்று நினைப்பவர்கள். அவர்களைப் பொறுத்தவரை, நமது கடலில் இந்த மீன்வளம் இருக்கும்வரை அள்ளிவிடவேண்டும் என்று நினைக்கின்றார்கள். அவ்வளவுதான். யுத்தகாலத்தில் கடலில் பாதுகாப்பை பலப்படுத்தியதுபோல கடலில் சட்டவிரோதமாக யார் மீன்பிடியில் ஈடுபட்டாலும் தயவுதாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைவிட, வெறும் அறிக்கைகளையும், பாராளுமன்றில் உரைகளையும் நிகழ்த்திக்கொண்டிருக்காமல், நமது தலைவர்கள் என்று சொல்வபவர்கள் தமிழகத்திற்கு சென்று, தமிழக மீனவர்கள் அத்துமீறு வதை தடுக்க அவர்களையும் கட்டாயப்படுத்தவேண்டும். அப்போதுதான் இதற்கு தீர்வுகாணமுடியம் என்று நினைக்கின்றேன்.

---

**ரி. ஜீவன்குமார் வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ.வீ. கே. சிவஞானம், ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் கட்சிகளுடன் சேர்ந்து மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார். அதற்கு பதிலளித்த புளொட் தலைவர் சித்தார்த்தன் தாங்கள் மூன்று கட்சிகளும் இப்போது மேலும் இரண்டு கட்சிகளுடன் ஜனநாயக் தமிழ் தேசியக் கூட்டணியாக இயங்குவதாகவும் அந்த கூட்டணியுடன் பேசுவது என்றால் அதுகுறித்து தமிழ் அரசு மத்திய செய்குழுவில் தீர்மானம் எடுத்தால் பேசத் தயார் என்றார். ஆனால் அதற்கு பதிலளித்துள்ள சிவஞானம், கூட்டணியுடன் பேசவேண்டிய தேவை தமிழ் அரசுக்கு இல்லை என்கிறாரே. இப்படியே இவர்கள் கதைத்துக்கொண்டு உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டியிட்டால் என்ன நடக்கும் என்று நினைக்கின்றீர்கள்?.

**வியுக்தியார்:** சிவஞானம் முதலில் அழைப்பு விடுத்தது, மூன்று கட்சிகளுக்குத்தான். ஆனால், கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட்டபோது அவர்களுடன் ஜனநாயக போராளிகள் கட்சியும் இருந்தது. அவர்கள் பதிவுசெய்யப்படாத கட்சி என்பதால் உத்தியோக பூர்வமாக இணைக்கப்படாவிட்டாலும் அவர்களிற்கும் கூட்டமைப்பில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவர்களும்தான் இப்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் இருக்கிறார்கள். ஆக, அவர்களை தனித்தனியாக சேர்த்து இயங்குவதை விட அவர்களை ஒரு கட்சியாக இணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இயங்குவதில் என்ன சிரமத்தை சிவஞானம் ஐயா கண்டார் என்று தெரியவில்லை. ஆனால் புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறியிருப்பதுபோல தமிழ் அரசின் மத்திய செயற்குழுவில் அனுமதி பெறமுடியாது என்பதை தெரிந்துகொண்டதால்தான் அவர் கூட்டணியுடன் பேசவேண்டிய தேவை இல்லை என்று தடாலடியாக அந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் என்று நினைக்கின்றேன். தனித்தனியாக போட்டியிட்டால், என்ன நடக்கும் என்று கேட்டிருக்கிறீர்கள். தமிழ் மக்கள் எங்களுடன்தான் இப்போதும் இருக்கிறார்கள் என்று வெற்றிபெற்றவர்கள் கூறப்போகின்றார்கள். பாராளுமன்ற தேர்தலின் பின்னர் கூறுவதைப்போல.

---

**க. தில்லைநாதன், மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியே இப்போது பேசுபொருள். அதைப்பற்றி பலரும் பல்வேறு கோணங்களில் எழுதியும் கேலிசெய்தும் வருகின்றனர். அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** அதுபற்றி ஊடகர் கிருஸ்ணா தனது முகநூலில் எழுதிய குறிப்பு என் கவனத்தைப் பெற்றது. அதனை இங்கு தருவதே உங்கள் கேள்விக்கு பொருத்தமானதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

'ரணில் வழக்கமாக நேர்காணலில் எப்படி நடந்து கொள்வாரோ அதே பாணியில்தான் இதிலும் நகர்கிறார் ஒரே வேறுபாடு அந்த தொகுப்பாளரின் வசீகரிக்கும் கேள்விகளும் லாஜிக்களான கருத்துக்களும் சர்காடிஸ்டிக்காக மடக்கி கேட்கும் எதிர்கேள்விகளும் மட்டுமே. ஈழத்து அரசியல் பரப்பில் தன்னை ஒரு நடுநிலையாளர் என்றும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சார்பானவர் என்பது போலவும் ரணில் காட்டி வந்த முகத்திரையை இது அசைத்துப்பார்த்திருக்கின்றது என்றெல்லாம் யாரும் சிலர் சொல்வார்கள்... அதை கொண்டாடுவார்கள் என்றால் 'அது ஒரு மிகப்பெரிய அபத்தம்'. ரணிலின் அரசியல் வரலாற்றை நன்கு கவனிப்பவர்களுக்கு அவர் ஒரு பக்கா அரசியல்வாதி மட்டுமே என்பது புரியும். இங்கு இந்த நேர்காணலில் ஈழத்தமிழர்களின் ஆழ்மன வலிகள் நியாயம் பெற்று ராஜபக்ஷ எதிர் நிலைப்பாடும் அந்த மண்டபத்தில் கைதட்டல் பெறுகின்றது. அதற்கும் நியாயபூர்வமான கேள்விகளை கேட்கும் அந்த தொகுப்பாளர் பங்கு அளப்பரியது. அதன் பீக்கில்தான் அந்த காணொளி இவ்வளவு வைரல் தன்மை பெறுகின்றது அதற்கு சளைக்காமல் அல்லது பிடிகொடுக்காமல் தன்னை ரணில் சிங்கள மக்களிடம் காப்பாற்றிக்கொண்டுள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் ஈஸ்டர் குண்டுவெடிப்பு ஈழப்போரின் இறுதி நாட்கள் பட்டலந்த கமிஷன் என்று பல ஆண்டுகளாக விடை தெரியாத அந்த கேள்விகள் ஒன்றும் முடிவுக்கு வரவும் இல்லை ரணில் அதை தன் போக்கில் கொஞ்சம் பதட்டத்துடன் கடந்துவிட்டார் அவ்வளவுதான். ஆனால் இது சர்வதேச அளவில் ரணிலுக்கு ஒரு தோல்வியோ ஈழத்தமிழர்களுக்கு மற்றும் இலங்கை முற்போக்கு சிந்தனையாளர்களுக்கு வெற்றியோ அல்ல இன்னும் இரண்டு நாட்களில் மறந்து போகும் இன்னொரு காணொளி மட்டுமே. இங்கு வென்றவர்கள் இருவர் "ஆட்சியில் இல்லாமல் இருந்தாலும் காட்சியில் இன்னமும் அக்டிவ் அரசியல்வாதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும் இன்னுமொரு நல்ல நிகழ்ச்சி என்ற பெயர் பெறும் அந்த தொகுப்பாளரும் மட்டும்தான்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி வரும் உலக அரசியல் ஒழுங்கு: போர்கள் தணிந்து அமைதி திரும்புமா?


ஐங்கரன் விக்கினேஸ்வரா

வல்லரசுகள் என்பவை காலத்திற்குக் காலம் மாறுபட்டே வந்திருக்கின்றன. வல்லரசுகளின் ஆதிக்கப் போர்களால் உலக வரலாற்றில் கற்பனைக் கெட்ட முடியாத பேரழிவுகளும், கொடுமைகளும் நிகழ்ந்து உள்ளன.

உலகின் மிக பெரிய வல்லரசு பகிரங்கமாக உதவியளிக்கும் உக்ரைன் நாட்டுடன் ரஷ்யா மோது வந்து, தற்போது எதிரியுடன் எதிரி கைகுலுக்கும் நிலமை ஏற்பட்டுள்ளது. இதனால் அமெரிக்கா ஒற்றை வல்லரசல்ல என்பதை ரஷ்யா உக்ரைன் போர் நிரூபித்திருக்கின்றது.

உலக வல்லரசாக இனி அமையப் போவது ஒருங்கிணைந்த நாடுகளின் கூட்டாக இருக்கலாம், இவை ஐரோப்பாவை மையப்படுத்தியதாக இருக்கலாம் எனும் எதிர்பார்ப்பும் உள்ளது.





உக்ரேன் மீது முழு அளவில் ரஷ்ய படையெடுப்பு தொடங்கிய மூன்றாம் ஆண்டு நிறைவு நாளான கடந்த பிப்ரவரி 24 அன்று, ரஷ்யாவின் தாக்குதலையும், உக்ரேனிய பிரதேசத்தை ஆக்கிரமித்ததையும் கண்டிக்கும் ஐ.நா பொது சபை தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா வாக்களித்தது.

இந்த வாக்களிப்பு மட்டுமன்றி, அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையின் பல மாற்றங்கள் உலக ஒழுங்கு முறையில் பாரிய மாற்றத்துக்கான அறிகுறியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.


மாறி வரும் உலக அரசியல் ஒழுங்கு உண்மையில் புட்டினுடன் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் நெருங்கிய நட்புறவால் ஏற்பட்டதா அல்லது அமெரிக்கா தனது பொருளாதார நலன்களுக்காக இந்த மாற்றத்தை உருவாக்கியதா என்பதை இனிவரும் காலங்களில் அறிந்து கொள்ளலாம்.

2022 பெப்ரவரியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உக்ரேன் மீது ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பு தொடங்கியதிலிருந்து, அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் சர்வதேச சட்டங்களை மீறிய குற்றத்திற்காக ரஷ்யாவை உலக அளவில் தனிமைப்படுத்தப்பட்ட நாடாக நடத்தி வந்தன.

ஆனால் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போது அந்நிலைமையை வேறுவிதமாக கையாண்டு இந்நிலையை மாற்றியுள்ளார். கடந்த வாரம் ட்ரம்ப் மற்றும் உக்ரேன் அதிபர் ஜெலென்ஸ்கி இடையே நடந்த காரசாரமான சந்திப்பின் போது இது மிகவும் பகிரங்கமாக தெரியவந்தது.

பத்திரிகையாளர்கள் முன்பாகவும், உலகின் கண்களுக்கு முன்பாகவும் உக்ரேன் போரைப் பற்றியும் அதை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது என்பது பற்றியும் இரு தலைமைகளும் காரசாரமாக வெளிப்படையாக வாதிட்டனர்.

அமெரிக்காவின் முந்தைய நிர்வாகத்தின் வெளியுறவுக் கொள்கை தோல்விகளிலிருந்து, ட்ரம்ப் அரச நிர்வாகம் தீர்மானமாக விலகுவது போல தெரிகிறது. ட்ரம்ப் தலைமையிலான அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட தீவிர மாற்றங்களை கொண்ட வெளியுறவுக் கொள்கையானது உக்ரைனியப் போரிலும் பிரதிபலித்துள்ளது.



அமெரிக்க நாட்டின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு, ரஷ்யாவுடன் நல்லுறவை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கையை ட்ரம்ப் நிர்வாகம் நியாயப்படுத்தியுள்ளது. தொடர்ச்சியான மோதல்கள் ரஷ்யாவிற்கும், உக்ரேனுக்கும், ஐரோப்பாவிற்கும் மோசமானது என்று அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தெரிவித்துள்ளார்.


இதன் விளைவாக உக்ரைனுக்கான உதவிகள் நிறுத்தப்படுகின்றன. ஆனாலும் உக்ரேனுக்கு ஆதரவாக திரளும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் அண்மையில் சந்தித்து உள்ளனர். தொடர்ந்து போரை நடாத்த ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவாக உள்ளன என்பது அமெரிக்க அரசுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதன் பின்னர் 1990களில் தொடங்கிய 'தாராளவாத உலக ஒழுங்கு' தற்போது சீர்குலைந்து கொண்டிருக்கிறது என ஐரோப்பிய அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

தாராளவாத உலக ஒழுங்கு என்பது உடன்படிக்கைகள், கொள்கைகள் மற்றும் நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச உறவுகளின் அமைப்பை உள்ளடக்கியது. இதன் மையத்தில் சர்வதேச சட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை, அதன் பொது சபை மற்றும் பாதுகாப்பு கவுன்சில் போன்ற அமைப்புகள் உள்ளன.

அத்துடன் தாராளவாத உலக ஒழுங்கு என்பது, உலக வர்த்தக அமைப்பு, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற நிறுவனங்களால் ஆதரிக்கப்படும் தடையற்ற வர்த்தகம் போன்ற குறிப்பிட்ட மதிப்பீடுகளையும் குறிக்கிறது.

ஆனாலும் மேற்கத்திய தாராளவாத ஜனநாயக அமைப்பு, அரசாங்கத்தின் சிறந்த மாதிரியை பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்ற கருத்தியல் அடிப்படையே பொதுவான கருத்தாகும்.



சர்வதேச சட்ட மீறல்களை ஐக்கிய நாடுகள் பொது சபையின் தீர்மானங்கள் அல்லது சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மூலம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கலாம்.

பின்னர், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் பொருளாதார தடைகளை விதிக்கலாம் அல்லது தீவிர சூழ்நிலைகளில் ராணுவ நடவடிக்கைக்கு அங்கீகாரம் அளிக்கலாம்.

ஆனாலும் நடைமுறையில், பொருளாதாரத் தடைகள் மற்றும் ராணுவத் தலையீடுகள் பெரும்பாலும் ஐ.நாவின் அனுமதியின்றி மேற்கொள்ளப்படுகின்றன. இதையே ரஷ்யா நீண்ட காலமாக விமர்சித்து வருகிறது.

2007 மியூனிச் பாதுகாப்பு மாநாட்டில், ஐ.நா. அனுமதித்தால் மட்டுமே ராணுவத்தைப் பயன்படுத்துவது சட்டபூர்வமானதாகக் கருதப்படும், நேட்டோ அல்லது ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றின் துணை அமைப்பாக ஐ.நாவை நாம் மாற்றிவிடக் கூடாது என்று ரஷ்ய அதிபர் விளாதிமிர் புட்டின் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்கத்திய நாடுகளின் அரசியல் அணுகுமுறை சர்வதேச சட்டங்களையும் ஐ.நா சபையின் விதிமுறைகளையும் பின்பற்றவில்லை என்று ரஷ்யாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கே லாவ்ரோவ் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் யுகோஸ்லாவியா நாடான சேர்பியா மீதான நேட்டோவின் 1999ஆம் ஆண்டு குண்டுவீச்சு, 2003ல் ஈராக் மீதான அமெரிக்கத் தலைமையிலான படையெடுப்பு மற்றும் 2008ல் கொசோவோ சுதந்திரத்தை அங்கீகரித்தது ஆகியவற்றை, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அனுமதியின்றி மேற்கத்திய நாடுகளால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ரஷ்யா அடிக்கடி சுட்டிக்காட்டுகிறது.

குறிப்பாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஐநா சாசனத்தில் உள்ள அடிப்படைக் கோட்பாடுகளை கடுமையாக மீறுவதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

நிகழ்காலத்தில் இடம்பெற்ற மிக முக்கியமான மனித உரிமை மீறல்களில் ஒன்றான, இஸ்ரேல்-ஹமாஸ் மோதலில் அமெரிக்காவின் நிலைப்பாடு தாராளவாத உலக ஒழுங்கு மீறப்பட்டதற்கு சான்றாக உள்ளது.

அத்துடன் பைடன் நிர்வாகம் இஸ்ரேலுக்கு ராணுவ ஆதரவை வழங்கியதற்காக பல நாடுகள் கடுமையாக விமர்சித்துள்ளன. மேலும் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் கொல்லபட்டது குறித்து அமெரிக்கா அலட்சியமாக இருந்தது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

நீண்டகாலமாக உலக அரங்கில் அமெரிக்கவின் இரட்டை நிலைப்பாடுகள் பாரிய கண்டனத்துக்கு உள்ளாகியது. குறிப்பாக பாலஸ்தீன மக்களின் உரிமைகளை பாதுகாக்க அமெரிக்க தவறியதுடன் உக்ரேனிய மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்தது என்று அரபு நாடுகளால் குற்றஞ்சாட்டப்பட்டது.

தற்போது ட்ரம்ப் அரசு ரஷ்யாவுடனான உறவுகளை வெளிப்படையாக இயல்பாக்கி வருகிறது. மேலும் அதிபர் ஜெலென்ஸ்கி மீது பொதுவெளியில் வாக்குவாதம் செய்ததுடன், ஐரோப்பாவில் தீவிர வலதுசாரி கட்சிகளை ட்ரம்பின் கூட்டாளிகள் ஆதரிப்பது ஐரோப்பிய நாடுகளை கடுமையாக பாதித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளுக்கு இழப்பீடு; அரசுக்கு 21 கோடி ரூபாய் நட்டம்

கொழும்பு, மார்ச்.09

'அறகலய'வின் போது தீக்கிரையாக்கப்பட்ட அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு இழப்பீடும் வழங்கப்பட்டுள்ளது, புதிய வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் காப்புறுதி தொகையும் வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் இவர்களே தமது வீடுகளுக்கு தீ வைத்துக் கொண்டார்களா என்ற சந்தேகம் காணப்படுகிறது, ஏனெனில் வீட்டின் ஜன்னல் தீக்கிரையானதற்கும் ஒருசிலர் இழப்பீடு பெற்றுள்ளனர். புதிய



வீடுகள் வழங்கிய போது முதல் தொகை மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது. இதனால், அரசுக்கு 21 கோடியே 19 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது என வீடமைப்பு பிரதி அமைச்சர் டி. பி. சரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் வீடமைப்பு அபிவிருத்தி மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# இவ்வாண்டில் 4 கிரகணங்கள்

கொழும்பு, மார்ச்.09

2025 ஆம் ஆண்டில் மூன்று சந்திர கிரகணங்களும் ஒரு சூரிய கிரகணமும் தென்படும் என ஆதர்சி கிளார்க் மையத்தின் தலைவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் பேராசிரியருமான சந்தன ஜெயரத்ன தெரிவித்தார்.

மூன்று சந்திர கிரகணங்களில் இரண்டு சந்திர கிரகணங்கள் முழு சந்திர கிரகணங்களாக தென்படும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரு திகதிகளில் நிகழவுள்ள முழு சந்திர கிரகணங்கள் இலங்கையில் தென்படாது.

மேலும், செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதியில் நிகழவுள்ள முழு சந்திர கிரகணம் இலங்கையில் தென்படும்.

சூரிய கிரகணம் நிகழவுள்ள திகதி குறித்து இதுவரை எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை எனவும் அவர் கூறினார். (எ)

# சுமந்திரனின் சுலோகம் உள்ளூராட்சி...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த கூட்டணியில் இணைவதற்கு தமிழரசு கட்சி ஒன்றும் சிறிய கட்சி அல்ல, அது இலங்கை தமிழ் மக்களின் பிரதான அரசியல் இயக்கம் என்று சிவஞானம் கடந்த வாரம் பதிலளித்திருந்தார். தமிழரசு கட்சி பெரும்பாலும் உள்ளூராட்சி தேர்தல்களை தனியாகவே சந்திக்கப் போகிறது. பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனின் தமிழ் தேசிய மக்கள் கூட்டணியும் கூட தனித்தனியாகவே போட்டியிடப்போகின்றன.

உள்ளூராட்சி சபைகளுக்கு தனித்தனியாக தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டு ஆசனங்களைக் கைப்பற்றிய பிறகு சபைகளின் நிருவாகத்தை அமைப்பதற்கு கூட்டுச் சேருவதே சிறந்த தந்திரோபாயம் என்ற தனது பழைய நிலைப்பாட்டையே சுமந்திரன் இந்த தடவையும் வலியுறுத்துகிறார். கடந்த வருட முற்பகுதியில் அந்த நிலைப்பாட்டை தமிழரசு கட்சி எடுத்ததையடுத்தே தமிழ் தேசிய கூட்டமைப்பில் எஞ்சியிருந்த புளொட்டும் ரெலோவும் வெளியேறி (ஏற்கெனவே தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த) ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை தங்களது தேர்தல் இயக்கமாக அறிவித்தன.

பாராளுமன்ற தேர்தலில் தமிழ்க்கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு பெரும் பின்னடைவைச் சந்தித்ததைப் போன்ற சூழ்நிலையே உள்ளூராட்சி தேர்தல்களில் மீண்டும் உருவாகிறது. அது மீண்டும் தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பானதாக அமையக்கூடிய சாத்தியமே இருக்கிறது. கடந்த ஐந்து மாதகால ஆட்சியில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் அவரது அரசாங்கமும் தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தின் பழைய சிந்தனையில் இருந்து விலகுவதற்கான எந்த அறிகுறியையும் காண்பிக்கவில்லை என்பதை வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் கவனத்தில் எடுத்து பாராளுமன்ற தேர்தலில் வழங்கியதைப் போன்ற ஆதரவை உள்ளூராட்சி தேர்தல்களில் வழங்காமல் விடுவார்களா? இந்த கேள்விக்கு உருப்படியான பதிலை அளிப்பதற்கு தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய மாற்றுவழி என்ன?

கடந்த வாரம் வடமராட்சியில் செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய சுமந்திரன் 'நாடு அநுராவோடு, ஊர் எங்களோடு" என்ற ஒரு சுலோகத்தை முன்வைத்தார். 'அடுத்த ஐந்து வருடங்களுக்கு மத்தியில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியதிகாரத்தில் இருக்கப் போகிறது. அதற்காக சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளூராட்சி விவகாரங்களை கையாளுவதையும் அவர்களிடமே விட்டுவிடக்கூடாது" என்று அவர் கூறினார். அவரது சுலோகம் எந்தளவுக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் எடுபடும் என்பதை பார்ப்பதற்கு நாம் நீண்டகாலம் காத்திருக்கத் தேவையில்லை.

பாராளுமன்ற தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்த தமிழ்க்கட்சிகள் உள்ளூராட்சி தேர்தல்களில் ஒன்றிணைந்து போட்டியிட்டால் கூட தமிழ் மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெறக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்ப்பது கஷ்டமாகவே இருக்கிறது. கடந்த வருடம் வடக்கில் தமிழ் மக்கள் தங்களை நிராகரித்ததற்கான உண்மையான காரணங்கள் குறித்து தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்குள் சுயபரிசோதனையை நடத்தியிருப்பதற்கான எந்த வெளிப்படையான அறிகுறியையும் காணமுடியவில்லை.

ஒன்றிணைந்து போட்டியிடாத காரணத்தினால் மாத்திரம் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு மக்கள் தங்களை நிராகரித்ததாக தமிழ் கட்சிகளின் தலைவர்கள் நினைப்பார்களாக இருந்தால் அவர்கள் மீண்டும் தவறு செய்வதாகவே அமையும். தற்போதைய நிலைவரங்கள் வேண்டிநிற்பதற்கு இசைவான முறையில் தங்களது அரசியல் அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ளாமல் தேசியவாத அரசியலை சுலோகங்களை தேவாரம் போன்று பாடிக்கொண்டிருந்தால் தமிழ் மக்களிடமிருந்து தமிழ்க் கட்சிகள் மேலும் தனிமைப்படவேண்டியிருக்கும்.

தமிழ் அரசியல்வாதிகள் காலங்காலமாக நீண்டகால அரசியல் அபிலாசைகளை பற்றி ஓயாது பேசுவதில் நாட்டம் காட்டி வந்திருக்கிறார்கள். மக்களின் உடனடிப் பிரச்சினைகளில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. நீண்டகால அபிலாசையைப் பற்றி எப்போதும் பேசிக் கொண்டேயிருக்கலாம். ஆனால், உடனடிப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தினால் விரைவாகவே பயனுறுதியுடைய விளைவுகளை காண்பிக்க வேண்டியிருக்கும். இது தமிழ் அரசியல் கட்சிகளிடமும் தலைவர்களிடமும் காணப்படும் பெரியதொரு குறைபாடு. அர்ச்சுனாவின் குறும்புகளுக்கு ஒரு கூட்டம் ஆரவாரம் செய்யும் துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கும் இந்த குறைபாடும் ஒரு முக்கிய காரணம். ●

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில்...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

விரிவாக ஆராயந்த நவாஸ் ஆணைக்குழு, 'எமது நாடு அளவுக்கு மிஞ்சிய ஆணைக்குழுக்களை கண்டிருக்கிறது. ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த பலர் முன்னைய ஆணைக்குழுக்களிடம் சாட்சியம் அளித்ததனால் எந்த பயனும் ஏற்படவில்லை என்ற தங்களது ஏமாற்றத்தையே வெளிப்படுத்தினர்" என்று உறைப்பாகக் கூறியது.

இந்த உணர்வு, விசாரணை செய்வதற்கு மாத்திரமல்ல, விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்து அதன் மூலமாக நிலைமாறுகால நீதியில் பொது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று தேவை என்பதை வெளிக்காட்டுகின்றன. நவாஸ் ஆணைக்குழு ஒரு உள்ளக செயன்முறை என்ற வகையில் முற்றிலும் இலங்கை அரசாங்கமே அதற்கு நிதியை வழங்கி ஆதரவளித்தது. அத்துடன் ஏனைய தேசிய ஆணைக்குழுக்களினால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களையே அது ஆராய்ந்தது. அதற்கு பின்னால் சர்வதேச சதி இருந்தது என்று எவரும் கூறமுடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தொடர்பிலான அரசாங்கத்தின் அண்மைய அணுகுமுறை இராஜதந்திர ரீதியாக ஊடாட்டங்களைச் செய்வதற்கான அதன் விருப்பத்தை வெளிக்காட்டுவதாக இருக்கிறது. ஆனால், அரசாங்கம் அதன் நம்பகத்தன்மையை வளர்ப்பதற்கும் அதன் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் இந்த ஊடாட்டத்துக்கு வலுப்படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதுடன் பங்கும் ஈடுபாடும் கொண்ட முக்கியமான குழுக்களை உள்ளடக்கி அதன் வீச்செல்லையை விரிவுபடுத்த வேண்டும். அரசாங்கம் பொதுப்படையான அறிக்கைகளுக்கு அப்பால் நகரிந்து சர்வதேச சமூகத்தினால் வெளிப்படுத்தப்பட்ட அக்கறைகளை கையாளுவதற்கு தெளிவானதும் உறுதியானதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இடம்பெயர்ந்த சமூகங்களுக்கு அவர்களின் காணிகளை திருப்பிக்கையளிப்பது முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாக இருக்க வேண்டும். இராணுவத்தினால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதன் விளைவாக வடக்கு, கிழக்கில் பல சமூகங்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்தே இருக்கின்றன. வாழ்வாதாரங்களை மீட்டுப் பெறுவதற்கும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் காணிகளின் சட்டரீதியான உரிமையாளர்களுக்கு அவற்றை திருப்பிக் கையளிக்கும் செயன்முறையை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும்.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுதலை செய்வதன் மூலமாக இத்தகைய நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவது அவசியமாகும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கணிசமான எண்ணிக்கையானவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு எதிராக எந்த குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. உரிய செயன்முறைகளை முன்னெடுத்து குற்றச்செயல்களில் ஈடுபட்டதற்கான நம்பகமான சான்று எதுவும் இல்லாதவர்களை விடுதலை செய்வதன் மூலமாக நீதி மற்றும் மனித உரிமைகள் மீதான மெய்யான பற்றுறுதியை வெளிக்காட்ட முடியும்.

இறுதியாக, வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளிலும் அரசாங்கம் அக்கறையுடன் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். குடிமக்களின் பகுதிகளில் தொடர்ச்சியான இராணுவப் பிரசன்னம் பதற்றத்தை ஏற்படுத்துவதுடன் நல்லிணக்க முயற்சிகளை மலினப்படுத்தவும் செய்யும். உளளூராட்சி முறை கட்டமைப்புக்களுக்கு வலுவூட்டும் நடவடிக்கைகளுடன் சேர்த்து இராணுவமய நீக்கத்தையும் செய்தால் அது இந்த பிரதேசங்களில் வாழ்வை வழமையாக்குவதை நோக்கிய முக்கியமான செயற்பாடாக அமையும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் தேசிய, சர்வதேசிய தரப்புகளுடனான அதன் இராஜதந்திர ஊடாட்டத்தை வலுப்படுத்த அரசாங்கம் மெய்யானதும் குறிப்பிடத்தக்க பயன்விறைவைக் காட்டுகின்றதுமான நடவடிக்கைளை எடுக்க வேண்டியது அவசியமானதாகும். காணிகளை திருப்பிக் கையளித்தல், தடுப்புக்காவல் கைதிகளை விடுதலை செய்தல் மற்றும் இராணுவமய நீக்கம் போன்ற மையப் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்துடனான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு உதவும் என்பது மாத்திரமல்ல, உள்நாட்டில் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் பங்களிப்பையும் செய்யும். இதையடுத்து சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுடனும் கலந்தாலோசனை நடத்தி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைத்து மானசீகமான அதை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

வழமையாக சம்பந்தப்பட்ட தரப்புகள் என்று வரும் போது அது பாதிக்கப்பட்டவர்கள், உயர்தப்பி வாழ்பவர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குள் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், நீதித்துறை, சட்ட நிறுவனங்கள், உண்மை மற்றும் நல்லிணக்கத்தின் தேவையை அங்கீகரிக்கின்ற சிவில் சமூக அமைப்புக்கள், மதத்தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்களை உள்ளடக்குவது குறைபாடுகளற்ற, நிறைவான செயற்பாடாக இருக்கும்.

இத்தகைய முக்கியமான முயற்சிக்கான அடித்தளத்தை நவாஸ் ஆணைக்குழு அறிக்கை அமைத்திருக்கிறது. அந்த முயற்சியின் வெற்றியை உறுதிப்படுத்தும் பொறுப்பு மேற்கூறப்பட்ட சகல தரப்புகளுக்கும் இருக்கிறது. சர்வதேச நியமங்கள் சீர்குலைந்து போயிருப்பதனால் பெருமளவுக்கு குழப்பநிலைக்கு உள்ளாகியிருக்கும் ஒரு உலகில் மனச்சாட்சியின் குரலாக விளங்கக்கூடிய சாத்தியப்பாட்டை இலங்கை கொண்டிருக்கிறது. குழப்பத்துக்குள்ளாகியிருக்கும் உலகை குணப்படுத்தும் செயன்முறைகளுக்குபைபங்களிப்பதற்கு இலங்கை அதன் பங்கைச் செய்ய முடியும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓகஸ்டில்...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பே பெண்களை துணிகரமாக உலகுக்கு வெளிக்காட்டியது. சுதந்திர பறவைகள் என்ற அடிப்படையில் புலிகள் அமைப்பில் பெண்களை எமது தேசியத் தலைவர் இணைத்துக் கொண்டார். ஆகவே எமது தேசியத் தலைவரே பெண்களை முழு உலகுக்கும் துணிச்சல் மிக்க பாத்திரமாக வெளிப்படுத்தினார்.

இசைப்பிரியா படுகொலை, பாலச்சந்திரன் படுகொலை மற்றும் கிருசாந்தி படுகொலைக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முறையான விசாரணைகளை மேற்கொள்வதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதனை தமிழ் மண் நம்பாது. ஏனெனில் இவை வெறும் அரசியல் வாக்குறுதிகள் என்பதை நாங்கள் நன்கு அறிவோம்.

2022 ஆம் ஆண்டு இந்த நாட்டில் காணப்பட்ட ஸ்திரமற்ற நிலைமையின்போது சிங்கள மற்றும் தமிழ் தலைவர்கள் எமது தேசியத் தலைவரை நினைவுபடுத்தினார்கள் என்பதை இதன்போது குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டில் பெண்களுக்கு முறையான அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு காணப்படுகிறதா என்பது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. எமது தேசியத் தலைவரின் காலத்தில் பெண்கள் இரவு 12 மணிக்குக்கூட சுதந்திரமாக வெளியில் செல்லும் நிலை காணப்பட்டது.

ஆனால் தற்போது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பகலில் கூட வெளியில் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. பெண்களுக்கு நான் மதிப்பளிப்பேன். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்து அந்த பதவியை பெண் பிரதிநிதி ஒருவருக்கு வழங்குவேன்-என்றார். (அ)

## வடக்கின்...

ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து, துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தமது முதலாவது இன்னிங்ஸில் 181 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி, 142 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து, 93 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி, 5 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், இலக்கை அடைந்தது. (அ-05)

## பிள்ளைகள்..

சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

சிறு வயது முதலே இது பெண்களின் வேலை, ஆண்களின் வேலை எனப் பிரிக்காமல் எல்லா வேலைகளையும் ஆண் பெண் என்ற பாரபட்சம் பாராது செயற்படும் பழக்கத்தை ஏற்படுத்தினால் அடுத்த இரண்டு பரம்பரைக்குச் சட்டங்களின் ஊடாக பெண்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துவதை விட ஆண்களே பெண்களின் பாதுகாப்பாக அமைந்து விடுவார்கள்.

பெண்கள் சமூகத்துக்கு ஆற்றும் பங்களிப்பு தொடர்பில் பார்க்கும் போது அவர்களுக்காக ஒரு நாள் மாத்திரமில்லை ஒரு வருடத்தை ஒதுக்கினாலும் மிகையாகாது.

பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தண்டனையை ரத்து செய்து சட்டம் ஒன்றை வெகு விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். தண்டனைகள் பிள்ளைகளின் அபிவிருத்தியில் பெரிதும் பாதிக்கின்றது.

வன்முறையால் பிரச்னைகளைத் தீர்க்க முடியும் என்று பிள்ளைகள் உறுதியாக நம்பினால், பெரியவர்களாக இருந்தாலும் அவர்கள் அதைத் தொடர்ந்து செய்வார்கள். பாதாள உலகம் உட்பட அனைத்திற்கும் பின்னால், உடைந்து நொறுங்கிப் போன ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இருக்கிறார்

## மத்திய...

தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

அதேவேளை, மத்திய வங்கி பத்திர மோசடி மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படும்.

அத்துடன் இவை இரண்டும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்திலேயே இடம்பெற்றுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படைத்தன்மைக்கு உறுதி பூண்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க முன்னர் அரசியல் பாதுகாப்பைப் பெற்ற அனைத்து குற்றச்சாட்டுகள் மீதும் நடவடிக்கை எடுக்கும்-என்றார். (அ)

## ஒரே நாணய...

சந்திப்பின்போது, ஜனாதிபதி இந்த விடயத்தை குறிப்பிட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வறியவர்களின் முன்னேற்றத்துக்குத் தேவையான பொறிமுறையை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், நலன்புரிச் செலவுகளை வலுப்படுத்தல் என்பவற்றுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளிப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

வலுசக்தித் துறை உள்ளிட்டவற்றில் சரியான நிர்வாகம் மற்றும் செலவு - மீளமைத்தல் விலை நிர்ணயத்தினூடாக அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

கடன் அச்சுறுத்தலைக் குறைத்தல், நிலையான மற்றும் பேரண்ட அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குப் பலதரப்பு கூட்டிணைவுகளின் நேரடி வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

நீடிக்கப்பட்ட கடன் வசதி வேலைத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள மீளாய்வுகளைச் சாதகமாக நிறைவு செய்வதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட உள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது கிரிஸ்டலினா ஜோர்ஜிவாவிடம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையை நிலையான மற்றும் சமநிலையான அபிவிருத்தியை நோக்கி நகர்த்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மறுசீரமைப் புத் திட்டத்தை பின்வாங்காமல் செயற்படுத்த வேண்டிய தன் முக்கியத் துவத்தைச் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவா இதன்போது வலியுறுத்தினார்.

விசேடமாகத் தொழில்நுட்பம் மற்றும் உலக அரசியலின் துரித வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நிலையான வகையில் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பும் செயற்பாடுகளின் சவால் மிகுந்த தன்மையை அவர் ஏற்றுக் கொண்டதோடு, இலங்கையின் நிலையான பங்குதாரராகச் சர்வதேச நாணய நிதியம் செயற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து துறைகளும் உள்ளடங்கும் அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலுக்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்தும் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், இலங்கை நிலைப்பேறான ஸ்திரத்தன்மையை அடைந்து கொள்வது தொடர்பான தொடர்ச்சியான கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதியும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளருக்கு இடையில் இதன்போது இருதரப்பு இணக்கமும் எட்டப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், செழுமையான மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் அன்னியோன்னியமாக செயற்பட வேண்டியதன் அவசியமும் இதன்போது வலியுறுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு

# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனிவழி

### சொல்கிறார் சுமந்திரன்

மட்டக்களப்பு, மார்ச் 09

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனி அணியாகவே போட்டியிடும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளைக் கூட்டம் நேற்று மாலை மட்டக்களப்பில் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சாணக்கியன் தலைமையில் நடைபெற்றது.

இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வேட்பாளர்கள் தெரிவு தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளைக் கூட்டம் இன்று (நேற்று) நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பிரதானமாக ஒவ்வொரு பிரதேசமாக அலசி ஆராய்ந்து என்ன முறையிலான அணுகுமுறையில் நாங்கள் இந்த தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று பலருடைய கருத்துக்களும் கேட்கப்பட்டு சுமூகமான முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை நாங்கள் போட்டியிடுகின்ற சகல உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி வாகை சூடலாம் என்று நம்பிக்கையோடு எங்களுடைய உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். வருகின்ற வாரத்துக்குள் நாங்கள் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்து விடுவதாக தீர்மானித்திருக்கின்றோம்.

ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிடுவது வேண்டாம் என்று கூட்டத்தின்போது அனைவராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அந்த முயற்சி முடிவடைந்துவிட்டது என்பது தான் என்னுடைய கருத்து. எங்களுடைய கட்சியின் பதில் தலைவர் அதற்கான ஒரு முயற்சியை முன்னெடுத்திருந்தார்.

ஆனால் எங்களுடன் பங்காளிகளாக இருந்த கட்சிகள் தாங்கள் வேறு ஒரு கூட்டணியாக இணைந்து இருக்கின்றோம் என்று எங்களுக்கு அறிவித்திருக்கின்றார்கள்.

ஆகையினால் ஓர் அணியாக ஒன்று சேர்ந்து போட்டியிடுவது என்பது இப்போது முடியாத விடயம். தமிழரசுக் கட்சி தனி அணியாக போட்டியிடும். தேர்தலுக்குப் பின்னர் நிர்வாகங்களை அமைக்கின்ற விடயத்தில் ஒவ்வொரு கட்சிகளுடன் இணைந்து தான் நிர்வாகத்தை அமைக்க வேண்டியதாக இருக்கும். அதுதான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முறைமை. ஆகையினால் அதை குறித்து தொடர்ச்சியாக பல கட்சிகளோடும் பேசிக்கொண்டு இருக்கின்றோம் - என்றார். (அ)

# கடல் வழியாக செவ்வந்தி இந்தியாவுக்கு தப்பினார்?

கொழும்பு, மார்ச் 09

புதுக்கடை நீதிமன்றத்தில் பாதாள உலகக் கும்பல் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டதற்கு மூளையாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் இளம் பெண் இஷாரா செவ்வந்தி, கடல் வழியாக படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று விசாரணை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

சந்தேக நபர் மறைந்திருப்பதாக நம்பப்படும் கிட்டத்தட்ட 200 இடங்களை ஆய்வு செய்தபோதிலும், அவர் பற்றிய எந்தத் தகவலையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் விசாரணை அதிகாரிகள் கூறுகின்றனர்.

சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி தனது கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டதால், அவரைப் பற்றிய எந்த தடயமும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு, இஷாரா செவ்வந்தி களுத்துறை பகுதிக்குச் சென்று ஒரு தங்க நகைக் கடையிலிருந்து சுமார் 500,000 ரூபாய் மதிப்புள்ள நகைகளை வாங்கிச் சென்றார். ஆனால் அதன் பின்னர் அவரைப் பற்றிய குறிப்பிடத்தக்க தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

சந்தேக நபர் தென் மாகாண கடற்கரை வழியாக படகு மூலம் நாட்டை விட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என்ற பலத்த சந்தேகம் தற்போது எழுந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

## கைது வேட்டை...

கூறியவை வருமாறு-

கொள்கைக்காகவே நாம் அரசியல் நடத்துகின்றோம். மாறாக அதிகாரத்துக்காக அரசாங்க பலத்தை பயன்படுத்துவதில்லை. பலவந்தமாக ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள முற்படுவதும் இல்லை.

வெளிநாட்டு சக்திகள் பணம் செலவளித்து கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலக வைப்பதற்கு முற்பட்ட போதுகூட, அது ஜனநாயக விரோத கோரிக்கை என தெரிந்தும் மக்களுக்காக கோட்டாபய ராஜபக்ஷ பதவி துறந்தார்.

அன்று முதல் இன்றுவரை நாம் மக்களுக்காக அரசியல் நடத்துபவர்கள். பொய்கூறி ஆட்சிக்கு வரப்போவதில்லை. நாட்டுக்கு துரோகம் இழைத்ததும் கிடையாது.

எனது பாட்டியைக்கூட விட்டு வைக்கவில்லை. அவரையும் கைது செய்கின்றனர். இது வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடாகும். எனினும், நாட்டிலுள்ள நீதித்துறை மீது

## கல்சியம் நீக்கி...

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-05)

## யாழில்...

பெயந்தோரிடம் பணத்தைப் பெற்று இந்தச் செயற்பாட்டை செய்து வருவதாக காணொளிகளில் குறிப்பிட்டுள்ளார்

அந்தவகையில்,குடும்பம் ஒன்றுக்கு உதவி செய்வதாக தெரிவித்து குறித்த யூடியூபர் பெண்ணின் வீட்டுக்கு வந்துள்ளார்.

இதன்போது அங்கிருந்த மாணவி தன்னை காணொளி எடுக்கவேண்டாம் எனக் கூறியபோதிலும் வலுக்கட்டாயமாக அவரை காணொளி எடுக்க முயன்றுள்ளார்.

எனினும் அந்த மாணவி அதற்கு மறுத்ததால் கடுமையாக வார்த்தைப் பிரயோகங்களால் குறித்த யூடியூபர் அவரையும் அவரின் தாயையும் திட்டியுள்ளார்.

இந்நிலையில் குறித்த காணொளி சமூக ஊடகங்களில் வைரலான நிலையில் குறித்த நபர் மற்றும் குறித்த குடும்பம் தொடர்பிலான விவரங்களை வழங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## ரணிலின் குடியுரிமையை இரத்து செய்ய வேண்டும்!

### துமிந்த நாகமுவ கோரிக்கை




கொழும்பு, மார்ச் 09

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குடியுரிமையை இரத்து செய்து, அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டுமென முன்னிலை சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அதன் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ இதனைக் குறிப்பிட்டார்.

அல்ஜஷீராவுக்கு கருத்துரைத்த முன்னாள் ஜனாதிபதி, பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டதா? எனக் கேள்வி எழுப்பியதன் ஊடாக, அந்த அறிக்கை அரச கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படாத ஒன்று எனக் குறிப்பிடுவதாக துமிந்த நாகமுவ கூறியுள்ளார்.

ஜனாதிபதியினால் குறித்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாகவும், அவ்வாறானால் அப்போதைய ஜனாதிபதி எதற்காக அதன் அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிக்கவில்லை எனவும் துமிந்த நாகமுவ கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பயணத்தைப் பாதுகாப்பதற்காகவே அவர் அவ்வாறு செய்தார் எனவும் துமிந்த நாகமுவ குற்றஞ் சாட்டினார்.

# பெண்களின் உரிமைகளை அடிப்படை சட்டமாக்குங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்புஇ மார்ச் 09

**பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகளை நாட்டின் அடிப்படைச் சட்டமாக்குங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகாரம் தொடர்பான வரவு-செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமூகத்தில் குழந்தைகள், தாய்மார்கள், பெண்க ளைப் பார்க்கும்போது, உணவுப் பணவீக்கம், ஊட்டச் சத்து குறைபாடு, வறுமை ஆகியவற்றால் உருவாக்கப் பட்ட மிக ஆபத்தான, தீங்கு விளைவிக்கும், பாதகமான பொருளாதார மற்றும் சமூக சுழற்சியில் பெண்கள், குழந்தைகள் மற்றும் சிறுமிகள் நித்திய கைதிகளாக மாறியிருப்பதைக் காண்கிறோம்.

பணவீக்க அதிகரிப்பால், அரிசி, தேங்காய், உப்பு போன்ற மனித வாழ்க்கையை பேணிச் செல்லத் தேவையான வசதிகளை தாயும் குழந்தையும் இழந்துள்ளனர். வரவு-செலவுத் திட்டமானது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான வசதிகளை ஸ்திரப்படுத்தாத போது, அது நாட்டையே பாதிக்கும் ஒரு தீய சுழற்சிக்கு வழிவகுக்கிறது.

தாய் மற்றும் குழந்தை ஊட்டச்சத்தின்மைக்கு மத்தியில் ஒரு குழந்தை வயதுக்கு வந்து, தாய்மையடைந்து அவரும் ஊட்டச்சத்துக்கு ஆளாகும் போது, ஊட்டச் சத்து குறைபாடுள்ள குழந்தைகளையே பிறக்கும். இந்த தொடர்ச்சி சிசுக்கள் மற்றும் தாய்மார்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்னையாகும்.

2024 இல் காணப்பட்ட 9ஆவது பாராளுமன்றத்தில் ஊட்டச்சத்து குறைபாடு குறித்து விசேட தெரிவுக் குழுக் கூட்டத் தொடர் நடைபெற்றன.

கூட்ட அறிக்கைகளின்படி, ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள், எடை குறைந்த குழந்தைகள், குறைந்த எடை கொண்ட குழந்தைகள்இ வளர்ச்சி குன்றிய குழந்தைகள், அதிக எடை கொண்ட குழந்தைகள், இரத்த சோகை, தாய்மார்களின் குறைந்த உடல் நிறை குறியீட்டெண், போதிய நுண்ணூட்டச் சத்துகள் இல்லாததால் குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் எல்லா தரப்பிலிருந்தும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது வெளிக் கொணரப்பட்டன.

இவற்றில் இருந்து வெளிவருவதற்கு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்த தேசிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பது மிகவும் முக்கியமானது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் படி, இலங்கை பல்-பரிமாண அபாய நிலைமைகள் மற்றும் குறிகாட்டிகளை எதிர்நோக்கியுள்ளன. நமது நாட்டில் 10 பேரில் 6 பேர் பல ஆபத்துகளுக்கு ஆளாகிறார்கள்.

மேலும்இ நமது நாட்டில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க பல சட்டங்கள் காணப்படுகின்றன. பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிர்பார்க்கப்படும் பாதுகாப்பும் இதன் ஊடாக நிறைவேற்றப்படுகிறதா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இச்சட்டங்களின் நடைமுறைத் தன்மையை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளன. இது தொடர்பில் பூரண கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)

# யாழ்.தலைமைப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரிக்கு உடனடி இடமாற்றம்!

யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரிக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியின் மகன் ஒருவர் இலஞ்சம் பெற்றதாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவாகி இருந் தது.

முறைப்பாட்டைச் செய்தவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்றபோது யாழ்ப்பாணம் பொலிஸாரினால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்நிலையில் குறித்த வழக்கை இல்லாது செய்வதற்காக யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியின் மகன் 20 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்றிருந்தார். இருப்பினும் கொடுத்த வழக்கு நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் முறைப்பாட்டாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் தலைமைப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியின் மகனுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்ட போதும் பொலிஸார் குறித்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லவில்லை. இந்த விடயமானது நேற்று முன்தினம் மீண்டும் ஊடகங்களில் பேசுபொருளாகியது.

இவ்வாறான பின்னணியில் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபாலவால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டது. (அ-05)

# தேங்காய் தட்டுப்பாடு காரணமாக 450,000 பேர் வேலையின்றி நிர்க்கதி!

கொழும்பு, மார்ச் 09

நாட்டில் தற்போது நிலவும் தேங்காய் தட்டுப்பாடு காரணமாக பல உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் விளைவாக சுமார் 450,000 பேர் தொழிலை இழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

நாட்டின் தேங்காய்கள் கணிசமான பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் இது உள்நாட்டு தேங்காய் எண்ணெயின் உற்பத்திக்கு ஒரு தடையாக மாறியுள்ளது.

இதற்கிடையில், தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் இறக்குமதி செய்யப்படும் மரக்கறி எண்ணெய் அல்லது பிற எண்ணெய்களுக்கு வரி அறவிடப்படுவதில்லை

ஆனால், உள்நாட்டு தேங்காய் எண்ணெய்க்கு 15 வீத வரி செலுத்தவேண்டியிருப்பது நியாயமற்றது எனத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் மற்றும் உள்ளூர் தொழிற்சாலைகளை நடத்துவோருக்கு இடையூறாகவும் பல தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கும் இதுவே காரணம் என உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# 17 இந்திய மீனவர்களுக்கு 10 வருட ஒத்திவைத்த சிறை

மன்னார், மார்ச் 09

இலங்கை கடல் எல்லை பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 17 பேருக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் மேலும் ஒரு மீனவருக்கு இரண்டரை இலட்சம் ரூபா தண்டப் பணமும் விதித்து விடுதலை செய்யுமாறு மன்னார் நீதவான் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை தீர்ப்பு வழங்கியுள்ளார்.

அதே நேரம் நபர் ஒருவர் அனுமதிப்பத்திரம் இன்றி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் இரண்டாவது தடவையாக ஈடுபட்டமை கண்டறியப்பட்ட நிலையில் குறித்த நபருக்கு 24 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த மாதம் தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 32 மீனவர்களில் நான்கு மீனவர்கள் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனைய மீனவர்களை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

அதே நேரம் கடந்த மாதம் 2ஆம் திகதி கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களில் 9 பேர் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன் ஒருவர் இரண்டாவது தடவை இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக 2 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களும் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் இலட்சம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் மன்னார் தாழ்வுபாடு பகுதியில் கைது செய்யப்பட்ட 14 மீனவர்களையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org